176534

பால வ்யாகரணம்

JC
M211.N19BV
N26
126534

## அறிக்கை

பால விநோதினியின் சந்தா நேயர்கட்கு— அன்பர்காள்!

சென்றுபோன தம் ... வருஷத்தின் அந்தியில் இன்பமருளும் பரம கிருபா நிதியாகிய செந்திலாண்டவன் திருவருளாலும் எமது குரு நாதராகிய பிரம்மஸ்ரீ திரு. அ. சொக்கநாத சாகர யோகீஸ்வரரின் ஆசீர்வாதத்தாலும் பால விநோதினிப் பத்திரிகையை எம்மாலியன்ற வரையில் யாவரும் மகிழ்ந்து புகழும் வண்ணம் சிறப்பாக நடத்தி வந்தோமாயினும் எதிர்பாராத பல இன்னல்களின் காரணமாய்க் கடந்த ஆகஸ்டு மாதத்திலிருந்து பத்திரிகையைச் சரியாய் நடத்த இயலாமற்போயிற்று. இது பற்றி நாம் இயம்புதற்கரிய வருத்தமடைந்துள்ளோம். ஆனாலும் அந்த ஆண்டவனுடைய கிருபையால் நமது பத்திரிகையை ஆதியில் அது உலவி வந்தவிதமாக ஒவ்வொரு சஞ்சிகையிலும் இரண்டு படங்களமைத்து அவைகட்கேற்ற விஷயங்களுடன் சிறந்தநாளில் மாதந்தவறாமல் குறித்த தேதியில் பிரசுரிக்க உடன்பட்டு, வாவிள்ளா—ராமஸ்வாமி சாஸ்திருலு அண்டு ஸன்ஸ், என்பவர்கள் சிரத்தையுடன் வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

இவர்கள், தெலுங்கில் இனிப்பிரசுரிப்பதற்குப் புத்தகசாலை என்று எவரும் புகழும்படி ஆரம்பப் புத்தகமுதல் சகல சாஸ்திர இதிகாச புராணங்களையெல்லாம் வெகு அழகாக அச்சிட்டுப் பேரும் புகழும் பெற்று வருகிறார்கள்:

சென்னையில் மதிப்புடைய தனவந்தரிலும் யோக்யதையுடையவரிலும் இவர்களும் ஒருவராகையினால் சென்னை, தண்டையார்பேட்டையிலும் பிராட்வேயிலும் பத்து மிஷின்களுடன்கூடிய பெரிய அச்சாபீசுகள் வைத்து வெகு பிரபலமாக நடத்துகிறார்கள்.

இவர்களிடம் நமது பத்திரிகை போய்ச்சேர்ந்தது பெரும்பாக்கியமாகும். மேலும் இவர்கள் சிறந்த தேசாபிமானமும் பாஷாபிமானமு முடையவராகையினாலே கேவலம் பொருளையே பெரிதாகக்கொள்ளாமல் கீர்த்தியையே பெரிதாகக் கொள்ளும் குணமுடையவர்களாகையினால் பத்திரிகை இனி அதாவது வரும் ஜனவரி முதல், மாதந்தோறும் தவறாமல் எல்லோரும் விரும்பத்தக்க அலங்காரத்துடன் வெளிவருமென்பதில் பயமில்லை.

நாம் சகல சுதந்தரத்துடன் பத்திரிகையை இவர்களுக்கே வி[illegible]மாகையினால் இனி அதாவது வரும் ஜனவரி

JL
N 1934.
N 26.

எமது அச்சுக்கூடத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டிருக்கின்றன.

## விற்பனைக்குத் தயாராக இருக்கும் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| குமரேச சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| கோவிந்த சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 2 |
| அறப்பளீசுர சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| திருவேங்கட சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 5 |
| தண்டலையார் சதகம் பாட்டும் குறிப்பும் | 0 | 3 |
| கந்தர் கலிவெண்பா பாட்டும் குறிப்பும் | 0 | 1½ |
| திருமுருகாற்றுப்படை பாட்டும் குறிப்பும் | 0 | 2 |
| சரஸ்வதி அந்தாதி பாட்டும் குறிப்பும் | 0 | |
| நால்வர் நான்மணி மாலை பாட்டும் குறிப்பும் | 0 | [illegible] |
| அபிராமி யந்தாதி பாட்டும் குறிப்பும் | 0 | 1½ |
| மனுமுறைகண்ட வாசகம் | 0 | 5 |
| இராஜரிஷி தமிழ் மொழிபெயர்ப்பு நூல் | 1 | 4 |
| மகாதேவன் ஒரு தமிழ் நாவல் | 0 | 12 |
| சந்திரகுப்தன் ஒரு இனிய தமிழ் நாவல் | ... | |

நாம் தமிழில் இன்னும் பல நூல்களைப் புதிதாக வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். இப்பொழுது அவைகளில் சில அச்சிடப்பட்டு வருகின்றன.

V. RAMASWAMY SASTRULU & SONS,
*292, Esplanade, Madras.*

## V. RAMASWAMY SASTRULU & SONS

***PRINTERS, PUBLISHERS, BOOK-SELLERS***
***AND***
***TYPE FOUNDERS***

**SANSKRIT BOOKS**
IN DEVANAGARI CHARACTERS
AND
IN TELUGU CHARACTERS
ALSO
**TELUGU BOOKS**
**TAMIL BOOKS**
AND
**ENGLISH BOOKS**

**323, Tiruvottyur High Road,**
**Tondiarpet,**
***MADRAS.***

முதல் இவர்களே அதுபற்றிய சகல ஏற்பாடுகளுக்கும் பாத்தியப்பட்டவர்கள். ஆகையினால் இனிப்பத்திரிகை விஷயமாக எழுதும் எந்தக்கடிதமும் விஷயம் அனுப்புகிறவர்களும் கீழே கண்டுள்ள விலாசப்படி அவர்களுக்கே அனுப்ப வேண்டும்.

அன்பர்களே! பத்திரிகைக்கு நம்மையே பத்திராதிபராக வைத்துக்கொண்டிருப்பதால் நாம் முன்னிலும் அதிக ஊக்கத்துடனும் வழக்கத்துக்கு மாறுமலும் உங்களுடைய குழந்தைகள் படித்து மகிழ்ந்து நல்லபயனடைவதற்கேற்ற விதமாகவும் விஷயங்களை யெழுதி வருவோம். ஆண்டவனுடைய திருவருளேயே துணையாகக்கொண்டுள்ள நமக்கு அந்த ஊக்கந்தளரா தென்பது திண்ணம்.

ஆகஸ்டிலிருந்து டிசம்பர் முடிய நடத்த வேண்டிய பத்திரிகைகளும் முடிந்து விட்டன. அவைகள் விரைவில் அனுப்பப்படும். இதுவரையில் எம்மால் ஏற்பட்ட குறைகளொன்றையும் பொருட்படுத்தாமல் எப்போதும்போல் சந்தாதாராகவிருந்து பத்திரிகையை ஆதரித்து வருவதுடன் தங்களுடைய நண்பர்கட்கும் இது பற்றிச்சொல்லிச் சந்தாதாராகச் சேரும்படி செய்யுமாறு வேண்டுகிறோம். பத்திரிகையை ஆதரிப்பவர்களிலெல்லாம் தலைமையான தென்பதையும் அது நாட்டுக்கே செய்த பேருதவி யாகுமென்பதையும் நீங்கள் வீரர்களாகையால் உங்களுடைய கடமையாகிய அதனைக் கடைப்பிடித்து மகிழ வேண்டுகிறோம்.

கடந்த எட்டு வருஷகாலமாக நமது பத்திரிகையை ஆதரித்து வந்த தங்களுடைய பெருங்கருணையை நாம் என்று மறவோம்.

தங்கள் அன்பன்

திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

குறிப்பு:—பத்திரிகையைப்பற்றி விவரம் அறியவிரும்புகிறவர்களும் விஷயதானம் செய்கிறவர்களும் சந்தா அனுப்புகிறவர்களும் கீழே கண்ட இந்த விலாச தாரர்களுக்கே இனி எழுதவேண்டும்.

மானேஜர்,

வாவில்ள. ராமஸ்வாமி சாஸ்திரிலு அண்டு ஸன்ஸ்,

திருவொற்றியூர் ஹைரோட்,

வண்ணாரப்பேட்டை போஸ்ட், சென்னை.

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

அன்பார்ந்த ஐயா;

சென்ற எட்டு ஆண்டுகளாகச் சென்னையில் வாகவி. திரு. அ. சுப்பிரமண்ய பாரதியாரால் நடத்தப்பட்டு வந்த "பாலவிநோதினி" பத்திரிகையை நாங்கள் விலைக்கு வாங்கி விட்டோம். இப்பத்திரிகை ஜனவரிமாதம் முதல் எங்களால் சிறந்த முறையில் அதிகமான பக்கங்களுடனும், அழகிய சித்திர படங்களோடும் மாதந் தவறாமல் வெளியிடப்படும். பெரிய அச்சுக்கூடத்தை நாங்கள் வைத்து நடத்தி வருகின்றபடியால் இனித் தாமதமேற்படாது. "பாலவிநோதினி" பத்திரிகைக்கு இனி ஸ்ரீமான் பாரதியார் அவர்களே ஆசிரியராக இருப்பார். சந்தா நேயர்கள் தாங்கள் மறுபடியும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து எங்களுக்கு ஆதரவளிப்பதோடு, தங்களது நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேரும்படி செய்து ஊக்கமளிக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

"பாலவிநோதினி" க்கு விஷயதானம் செய்கின்றவர்களும், கடிதம் எழுதுகின்றவர்களும் பழைய விலாசத்திற்கு எழுதாமல் கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கே இனித் தங்களது கடிதங்களை எழுதும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"பாலவிநோதினி" யை வி. பி. யில் அனுப்புவதனால் சந்தாதாரர்களுக்கு 5-அணா வீணில் நஷ்டம் ஏற்படுகின்றது. ஆதலால் சந்தாநேயர்கள் ஜனவரி மாதக்கடைசிக்குள் மணியாடர் மூலமாகத் தங்களது சந்தாத்தொகையை எங்களுக்கு அனுப்பிவிடுவது நல்லது. இல்லாவிட்டால் நாங்கள் பத்திரிகையை பிப்ரவரியில் வி. பி. யில் அனுப்ப நேரிடும்.

இப்படிக்கு தங்கள்:

வாவில்ள. ராமஸ்வாமி சாஸ்திரிலு அண்டு சன்ஸ்,

392. திருவொற்றியூர் ஹைரோட்,

வண்ணாரப்பேட்டை போஸ்ட், சென்னை.

# PANDIT A. MAHADEVA SASTRY'S WORKS.

## THE BHAGAVADGITA

WITH

***Sankara Charya's Commentary***
***Translated from Sanskrit into English***

| | | |
|---|---|---|
| | | Rs. A |
| Third Edition (Fourth thousand), (For some years out of print), Contains Sanskrit Text of the Gita ... | 5 | 0 |
| **MINOR UPANISHADS Vol. I.** Comprising I. Atharvasikha and Kaivalyopanishad: (with Sanskrit text and English translation) ... | 1 | 0 |
| **MINOR UPANISHADS Vol. II.** (The Vedanta Doctrine of Sankaracharya) Comprising i. Sankaracharya's *Dakshinamurtistotra* and its commentary (Suresvaracharya's *Manasollasa*); ii. Suresvaracharya's *Pranavavartika* iii. Dakshinamurti Upanishad; (Sanskrit text with translation and notes in English) *Second Edition,* with the addition of the Sanskrit text of *Manasollasa* ... ... | | |
| **VEDIC LAW OF MARRIAGE**: Second Edition, (much enlarged with additional essays and notes) being the *First Volume* of the author's collected writings and speeches on Vedic Ideals of *Marriage, Caste, Religion* and *Social Reform* ... | 1 | |
| **Sri Krishnakarnamruta** with an English Translation by Mr. M. K. Acharya, M. L. A. ... | 1 | |
| **Sayings of Sri Ramakrishna Paramahamsa** (Pocket Edition) Cloth Bound ... | 1 | |
| **Colombo to Almora** by Swami Vivekananda. ... | 3 | |
| **Bhagavad Gita** with the Text in Telugu and an English Translation by Dr. Annie Besant ... | 0 | |

V. RAMASWAMY SASTRULU & SONS,
*292, Esplanade, Madras*



## अन्यसंस्कृतपुस्तकानि.

| | | |
|---|---|---|
| संस्कृतबालशिक्षा ... | ० | ३ |
| सरस्वतीप्रार्थना, श्यामलादण्डकं, नवरत्नमाला च | ० | २ |
| शब्दमंजरी (हलन्तात्मिका) ... | ० | ६ |
| यजुर्वेदसन्ध्यावन्दनम् ... | ० | २ |
| आदित्यहृदयम् ... | ० | १ |
| महाकवि बोधायनकृत-भगवदज्जुकनाटकम् ... | ० | ६ |
| शिवानन्दलहरी ... | ० | २ |
| रुद्रनमकचमकम् ... | ० | २ |
| सौन्दर्यलहरी ... | ० | २ |
| पञ्चसूक्तानि ... | ० | २ |
| रामकर्णामृतम् ... | ० | ८ |
| बालरामायणम् ... | ० | २ |
| विवेकचूडामणिः ... | ० | ८ |
| श्रीकृष्णकर्णामृतम् ... | ० | ६ |
| ,, आंध्रानुवादसहितम् ... | १ | ८ |
| शिवकवचम् ... | ० | २ |
| यजुर्वेदाह्निकम् ... | ० | ६ |
| श्रीवैष्णवाह्निकम् ... | ० | ८ |
| सूर्यनमस्कारमन्त्राः स्पष्ट-लक्षणसहितास्सस्वराः | ० | १ |
| लक्ष्मीनृसिंहस्तोत्रम् ... | ० | १ |
| मुकुन्दमाला ... | ० | १ |
| श्रीगोविन्दद्वादश (चतुर्दशी) मञ्जरिकास्तोत्रम् ... | ० | १ |
| बृहत्स्तोत्ररत्नाकरम् ... | | |
| भगवद्गीता मूलमात्रम् ... | ० | ४ |
| भर्तृहरिशतकत्रयम्, मूलम् ... | ० | ८ |
| विक्रमार्कचरित्रम् ... | ० | १० |
| संस्कृतान्ध्रवर्णबोधिनी, पत्रफलका ... | ० | २ |
| श्रीलक्ष्मीनारायणहृदयम् ... | ० | ३ |
| ब्रह्मसूत्राणि, मूलम् ... | ० | ३ |
| श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् ... | ० | १ |
| **॥ नामावलीसहितानि ॥** | | |
| विष्णुसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| ललितासहस्रनामस्तोत्रम् ... | ० | ६ |
| लक्ष्मीसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| सुब्रह्मण्यसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| शिवसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| वेङ्कटेशसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| अन्नपूर्णासहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| आंजनेयसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| गणपतिसहस्रनामस्तोत्रम् ... | ० | ४ |
| हिन्दी तेलुगु बालशिक्षा ... | ० | ३ |
| ,, प्रथमवाचकम् ... | ० | ८ |

वाविल्ल. रामस्वामि शास्त्रुलु अण्ड् सन्स्,
२९२, एस्प्लनेड्, चेन्नपुरी.

## विक्रमार्कचरित्रम् ॥

भो महाशयाः, अस्मन्मुद्रणशालायामिदानीं देवनागरलिप्यामपि ग्रन्थाः मुद्राप्यन्त इति विदितचरमेव तत्रभवतां भवताम् ॥

सुप्रसिद्धेषु गद्यग्रन्थेषु संस्कृतभाषाभिविविक्षूणां विक्रमार्कचरितम्, भोजचरितमित्युभावेव सुगमौ ॥ दाक्षिणात्यपाठानुसारेण मुम्बापुर्यादिपत्तनेषु मुद्रितयोरनयोः पुस्तकयोरभावादिदानीं विक्रमार्कचरितं दाक्षिणात्यपाठानुसारेणान्ध्रलिप्यां ग्रन्थलिप्यां च मुद्रितकोशैः समीकृत्य स्फुटतरायसाक्षरैः दृढाक्षिकणपत्रेषु संमुद्र्य विक्रीयमस्ति । आङ्ग्लपाठशालाय पठितॄणां माणवकानामुपकाराय, आङ्ग्लानुवादसहिता, अकारादनुक्रमणिका (Glossary) संयोजितास्ति । पाठशालाध्यापकाः सर्वेऽपि माणवकानेतत्पुस्तकक्रयणाय प्रोत्साह्य एतादृशग्रन्थमुद्रणाय प्रोत्साहयेयुरस्मानिति प्रार्थयामहे ॥

भोजचरितमपि त्वरितमेव प्रकटीष्यते ॥ एतन्मूल्यम् ०—१०—०

## ॥ बृहत्स्तोत्ररत्नाकरः ॥

भोस्सहृदयाः, विज्ञापयामो वयं किमपि भवत्सु,

अधुनाकिल, अस्मन्मुद्रणालये देवनागरीलिपिभिस्सञ्जातमुद्रणानि सर्वमतपरिग्रहक्षमाणि सर्वदासुलभसङ्ग्रहणानि कवचहृदय, पूजा, मन्त्राष्टोत्तर शतसहस्रनामादिसंवलितानि च कानिचन स्तोत्रजालान्यत्र सार्वजनीन पारायणादिसौकर्य सम्पिपादयिषया प्राकट्यमनैषिष्म ।

## ॥ अभिज्ञानशाकुन्तलं नाम नाटकम् ॥

भोभोरसचेतसः, आधुनिकीकिल काचन विज्ञापना,

इदंकिल राघवभट्टकृतव्याख्यया, श्रीनिवासाचार्यरचितव्याख्यया च सहितं दाक्षिणात्यौत्तरिकपाठभेदादिसङ्कलितं सहृदयहृदयाह्लादनचातुरीधुरीणरसालङ्कारादिपरिष्कृतं च नाटकं स्फुटतरदेवनागरलिप्या मुद्राप्यमाणं .सदचिरादेवास्मन्मुद्रणालये प्रचारार्हं भविष्यतीति ।

वाविळ्ळ. रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्,

स्थापकाः



மகாத்மா காந்தி

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


| தொகுதி 8 | 1926 ௵ அக்டோபர்-நவம்பர் | பகுதி 10 & 11 |
|---|---|---|


### தெய்வ வணக்கம்

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்; பொய்மை
பேசா திருக்க வேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்; மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்; உனை
மறவா திருக்க வேண்டும்;
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வினல் வாழ வேண்டும்;
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி! உண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வ மணியே!

(திருவருட்பா.)

# ஹிதோபதேசம்

பெரியார் பேசினால் அவர் பேசிமுடியும் வரையில் கவனமாய்க் கேட்டுக் கொண்டிரு. பெரியார் பேசு என்று அநுமதி கொடுத்தால் சபையில் பேசு. பெரியார் உத்தரவின்றிச் சபையில் எதையும் செய்யாதே. நீ பல கற்றவனானாலும் சிறுவனென்ற பாவனையுடன் அமைதியாயிரு. உன்னை நீயே "நானும் பெரியாரில் ஒருவனல்லவா? என்னையேன் நீர்மதிக்கவில்லை?" என்று வினவிக்கொண்டு இறுமாப்படையாதே.

உன்னுடைய நல்ல குணங்களைக்கண்டு உன்னைச் சபையார் பெரியவருள் சேர்த்துக் கொள்ளத் தக்கபடி நீ நடந்துகொள். "அடக்கம் அமரருள்—உய்க்கும்" என்பதையும் "பெருக்கத்துவேண்டும் பணிவு" என்பதையும் அடிக்கடி எண்ணு. "பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும் மறவாமல் நோற்பதொன்றுண்டு—பிறர் பிறர் சீரெல்லாம் தூக்கிச் சிறுமை புறங் காத்து யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல்" என்னும் உயரியபோதனையை மறவாதே.

பெரியார் யார்?—உலக அநுபவம், கல்வி, அறிவு, ஒழுக்கம் தெய்வபக்தி, ஜீவகாருண்யம், ஆண்மை



முதலியவைகளிலே சிறந்தவராய், உலகம் தங்களைப் போற்றவும் பின்பற்றவும் ஆதரிக்கவும் ஏற்ற நல்ல நிலையில் உழைப்பவரேயாவர்! தங்களுக்குத் தாங்களே பெரியாரென்று சொல்லிக்கொண்டு தங்கள் பேச்சையும் தங்கள் தீர்மானத்தையும் பிறர் பின்பற்ற வேண்டுமென்று எண்ணித் தலை நிமிரும் சழக்கர்களல்லர். பெரியார் செய்யும் செய்கையும், பேசும் பேச்சும், உலக நன்மைக்கு ஏதுவாயிருக்குமென்பதை நீ எப்போதும் நம்பு; உனக்கு அவர்களுடைய செய்கையிலேனும் தீர்மானத்திலேனும் குற்றமிருப்பதாகத் தெரிந்தால் பதறாதே! பண்புடன் அமைதியை மேற்கொண்டு சாவதானமாய் அதைப்பற்றி அவர்களைக்கண்டு விசாரித்து உண்மை தெரிந்துகொண்டு தக்க வழியில் நட.

ஸ்ரீராமன் தன்னை வனமேகப்பணித்த தன் மாற்றாந் தாயின் கட்டளையைப் பெரியார் ஏவல் கேட்க வேண்டியது தன் கடமையென்றும் பெரியாருடைய ஏவலினால் நன்மையே சித்திக்குமென்பதையும் தீர்மானமாய்க்கொண்டு வனமேகி, உலகத்திற்குப் பெரிய நன்மைகள் புரியவில்லையா?—ஆதலின் "பெரியாரைத் துணைக்கொள்"—"பேதைமையகற்று" "பீடுபெறநில்."

சாந்தம் தெய்வகுணம். அந்தக்குணம் சாதாரணமாய் எல்லோரிடத்திலும் அமையாது. முக்கியமாய் உலக அநுபவமில்லாதவர்களிடம் அந்தக் குணம் பிர

காசிப்பது துர்லபம். கல்விஞானத்திலும் உலக ஞானமே பெரிது. உலகஞானங் கைவரப்பெற்றவனை ஒரு கல்விமான் வெல்வதற் கியலாது. கல்வி விளக்குப் போல்வது. அந்த விளக்கு உலகஞானிகளிடம் அநுபவ வாயிலாகப் பிரகாசிப்பதால் அவன் அவனிலும் மேம்பட்டே நிற்பான். ஆதலால் கல்வியுடன் உலக ஞானத்தையும் பெற முயல். உலகஞான மடைவாயானால் சாந்தம் தானே உன்னைக் கோவிலாகக் கொள்ளும்.

## தற்புகழ்ச்சி யாகாது

### யயாதி

யயாதி என்று ஒருவேந்தனிருந்தான். அவன் நீதி தவறாமல் அரசாட்சி செய்தான்; பொறுமை, கருணை, அன்பு, அடக்கம், தெய்வபக்தி முதலிய உத்தமமான நல்லகுணங்களெல்லாம் அவனிடம் விளங்கின. அதனால் அவன் எப்போதும் தான தருமங்களைச் செய்துவந்தான். அநேக யாகங்களைச் செய்தான்.

யயாதியைப்போல் தான தருமங்களைச் செய்பவன் ஒருவனுமே இல்லை என்று ஜனங்கள் புகழ்வார்கள். கிழவனானபொழுது அவன் தன் மகன் பூரு என்பவனிடம் தனது அரசை ஒப்புவித்துத் தவம் செய்யக் காட்டிற்குச் சென்றான்.

யயாதி நெடுநாள் தவம் செய்தான். அவனுடைய ஆயுள் முடிவில் இந்திரன் முதலிய தேவர்கள் வந்து



விமானத்தில் அவனை ஸ்வர்கத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்கள். யயாதி புண்ணியத்தையே பெரிதாயெண்ணித் தேடினான். அதனால் அவனுக்கு ஸ்வர்க்க வாழ்வு கிடைத்தது.

யயாதி ஸ்வர்க்கத்தில் பலகாலம் வாழ்ந்து கொண்டு சகல சுகங்களையும் அநுபவித்து வந்தான். அப்பொழுது ஒருநாள் தேவராஜனாகிய இந்திரன் அவனிடம் வந்தான். இந்திரனை யயாதி மரியாதையுடன் வரவேற்றான். இந்திரன் யயாதியுடன் பலவிஷயங்கள் பேசிக்கொண்டிருந்தான்; அப்பொழுது, "மன்னா, நீ இந்த ஸ்வர்க்கபோகத்தில் நீடித்த காலமாய் இருக்கின்றாயல்லவா? இப்படியிருந்து சுபமனுபவித்தவர்கள் வெகுபேரில்லை. இதற்கு நீ செய்த புண்ணியம் என்னவோ?" என்று கேட்டான்.

யயாதி, இந்த வாழ்வில் கர்வங்கொண்டிருந்தான்; ஆதலால் அவன்தான் எப்படிப் பேசவேண்டுமென்பதை மறந்தான்; இந்திரனைப் பார்த்துக் கர்வத்துடன், "தேவராஜனே, ஆற்று மணலைக்கணக்கிடலாம்; ஆகாய நக்ஷத்திரத்தை எண்ணிவிடலாம்" நான் செய்த தருமங்களை ஒருவராலும் கணக்கிடமுடியாது. மூன்று உலகங்களிலும் என்னைப்போல் தருமம் செய்தவரில்லை" என்றான்.

யயாதி இப்படிச்சொன்னதும் இந்திரன் நகைத்து "வேந்தே, நீ உன் புண்ணியத்தை இழந்தாய்; நீ செய்த தருமத்தை நீயே புகழ்ந்து பேசினாய்; அது

தற்புகழ்ச்சி. தற்புகழ்ச்சி ஒருவனைத் தாழ்த்தும். ஆகையினால் உனக்கு இனி இந்த ஸ்வர்க்கத்திலே இடங்கிடைக்காது, போ" என்று சொல்லிக் கீழே தள்ளி விட்டான்.

யயாதி, உடனே தேவேந்திரனைப்பார்த்து, "நான் செய்த பிழையை உணர்ந்தேன். என்னைப் பூலோகத்தில் நல்ல சாதுக்களிடத்திலே சேர்ப்பிக்கவேண்டும்; சாதுக்களுடைய சேவை எல்லா நன்மைகளையும் தருமல்லவா?" என்றான். இந்திரன், "அப்படியே ஆகும்" என்றான். பிறகு யயாதி பூலோகமடைந்து சாதுக்களுடனிருந்து நல்ல தருமங்களைச் செய்தான். அப்பால் அவன் முடிவில் நல்லகதி சேர்ந்தான்.

## நகுஷன்

நகுஷன் என்றொரு மன்னனிருந்தான். அவன் யயாதியினுடைய தந்தை. அவனும் யயாதியைப் போலவே நல்ல குணங்களுடையவனா யிருந்தான். குடிகளை நீதிதவறாமல் ஆண்டுவந்தான். தான தருமங்களை ஏராளமாகச் செய்தான். எவராலும் செய்யமுடியாத நூறு அசுவமேத யாகங்களைச் செய்தான்.

நகுஷன் அதனால் சிறந்த புண்ணியத்தை அடைந்தான்; முடிவில் அவன் இந்திரனானான். இந்திரனானதும் அவனுக்கு எண்ணங்கள் மாறின; தான் இந்திரனானது புண்ணியத்தினால் என்பதை அவன் மறந்தான். ஆகவே அவன் தனக்குமுன் இந்திரனாயிருந்தவனுடைய மனைவி சசிதேவியை அடைய விரும்பினான்.



நகுஷன் சாதாரணமானவனல்லன். எவராலும் வெல்லமுடியாத வீரன். இதனால் அவனுக்குத் தேவர்களும் அஞ்சினார்கள். "வேந்தனே, நீர் கொண்ட எண்ணம் தகாதது. கொடிய பாபத்தைக் கொடுக்கக் கூடியது. வேண்டாம் இந்த எண்ணம்" என்று நயமாய்ச் சொன்னார்கள். நகுஷன் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. தான் கொண்ட எண்ணத்திலேயே பிடிவாதமாயிருந்தான்.

நகுஷன் இப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருப்பது சசிதேவிக்குத் தெரிந்தது. அவள் தங்கள் குருவாகிய பிருஹஸ்பதி பகவானிடம் போய் என்ன செய்வதற்கு என்று ஆலோசித்தாள். பிருஹஸ்பதி பகவான்; "அவனை உன்னிடம் ஒரு பல்லக்கில் வரச் சொல்; பல்லக்கு இதுவரையில் எவரும் பார்த்திராத அற்புத வேலைப் பாடுகளுடையதாயிருக்க வேண்டும்; அதனை ஸப்தரிஷிகளும் சுமந்து வரவேண்டும் என்று நயமாய்ச் சொல்லி அனுப்பு. அவன் அப்படிச் செய்ய முயல்வான். அதில் அவன் முடிவடையாமல் வாழ்வை இழப்பான்" என்றார்.

நகுஷனுக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டது. அதனால் அவன் ஒவ்வொரு நிமிஷமும் சசிதேவியை நினைத்துக் கொண்டிருந்தான். சசிதேவி தன் குரு சொல்லியபடியே சொல்லி அனுப்பினாள். நகுஷன் உடனே "இது என்னால் செய்யமுடியாதா? நகுஷனால் முடியாத காரியமும் உண்டோ?" என்று எண்ணிக்

கர்வங்கொண்டான்; அற்புதமான பல்லக்கு ஒன்றை உண்டாக்கக் கட்டளையிட்டான். அது அப்படியே செய்தாயிற்று. பிறகு சப்தரிஷிகளையும் வரவழைத்து "இந்தப் பல்லக்கில் என்னை நீங்கள் சசிதேவியின் மாளிகைக்குத் தூக்கிக்கொண்டு போகவேண்டும்" என்றான். ரிஷிகள் பொறுமையுடையவர்களாகையினால் ஆகா அப்படியே என்று சொன்னார்கள்.

நகுஷன் மதிகெட்டவனாய் விட்டபடியால், ரிஷிகளின் பெருமையை மறந்தான். அவர்கள் கோபங்கொண்டால் சபிப்பார்கள்; தயை கொண்டால் அனுக்கிரகமும் செய்வார்கள். அவர்கள் தெய்வாம்ச முடையவர்கள். தவம் அவர்களுக்கு இவ்வளவையும் கூட்டி வைக்கும். ஆயினும் அவர்கள் பொறுப்பவர்கள். நடந்ததும்; நடப்பதும் நடக்கப்போவதும் அவர்களுக்குத் தெரியும்

நகுஷன் இப்படிப் பட்டவர்களை அவமதிக்கத் துணிந்தது எதனால்? அவன் கொண்ட கெட்ட எண்ணத்தினாலல்லவா? ஆகையினாலேதான் பெரியோர்கள் கெட்ட எண்ணத்திற்கு இடந்தருவ தாகாது—என்று சொல்லுகிறார்கள்.

நகுஷன் பல்லக்கில் ஏறிக்கொண்டான். ஸப்த ரிஷிகளும் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போனார்கள். போகையில் நகுஷன் "அவசரம், சீக்கிரம்" என்று அகஸ்தியர் இருந்த இடத்தில் காலை அழுத்தினான். அகஸ்தியர் கோபங்கொண்டு "நீ பூமியில் மலைப்



பாம்பாக உழலக்கடவாய்" என்று சாபமிட்டார். அதைக்கேட்டதும் நகுஷன் பயந்து அவரை வணங்கி சாபவிமோசனம் எப்பொழுது என்று கேட்டான். அவர் "பாண்டவர் வனவாசத்துக்கு வருவார்கள். அப்பொழுது சாபம் நீங்கும்" என்றார். அவன் உடனே மலைப்பாம்பாய் பூமியில் ஒரு காட்டில் விழுந்து கிடந்தான்.

# மகாத்மா காந்தி

(ஸ்ரீமான். கே. எஸ். மணியன் எழுதியது.)

நமது பண்டைப் பெருமை வாய்ந்த பாரத நாட்டிலே தோன்றிய பெரியார்களில் மகாத்மா காந்தியும் ஒருவராவர். அப்பெரியார் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செய்திருக்கின்ற அரியதொண்டை நாம் என்றுமே மறக்கமுடியாது. உலகத்திலே இதுபோழ்து சத்தியமும், தர்மமும் குறைந்து வருகின்றன. இக்காலத்தில் உலகத்திற்குச் சத்தியத்தின் பெருமையையும், அதன் வலிமையையும் நன்கு எடுத்துக் காட்டி, தர்மவழிகளை உபதேசித்து வருகின்ற உத்தமரும் மகாத்மா காந்தியேயாவர். "அஹிம்ஸா பரமோ தர்ம" என்ற முதுமொழியைப் பின்பற்றி அதன் பெருமையையும் தற்காலம் உலகிற்கு அறிவுறுத்தி வருகின்றவரும் காந்தி யடிகள்தான். உலகத்திலுள்ள பலதேசத்தவர்களும் காந்தி யடிகளைப்

புகழ்ந்து அவருடைய உபதேச மொழிகளையெல்லாம் பொன்னைபோல் போற்றி வருகின்றனர். காந்தியடிகளின் பிறப்பினால் நமது தாய் நாடாகிய இந்திய நாடு உலகத்தவர்களால் போற்றப்படுகின்றது. உலகம் போற்ற உடம்பெடுத்த அம்மகானின் பெருமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? இந்தியாவின் உண்மையான சரித்திரம் எழுதப்படுகின்ற காலத்தில் காந்தியடிகளின் சரித்திரமும், அவருடைய உபதேச மொழிகளும் அதில் பொன்னைபோன்ற எழுத்துக்களால் வரையப்படும் என்பதில் ஐயமேயில்லை. பொதுவாகக் கூறுமிடத்து மனிதசமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதியே அப்பெரியார் உழைத்து வருகின்றார் என்று கூறலாம். அப்படிப்பட்ட பெரியாரின் சரித்திரத்தை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

## பிறப்பு

பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்ற சிறிய சமஸ்தானம் ஒன்று இருக்கிறது. அந்த சமஸ்தானத்திலே உள்ள ஒரு கௌரவம் வாய்ந்த வைசிய குடும்பத்தில் 1869-ம்வருஷம் அக்டோபர்மாதம் 2-ந்தேதியன்று மகாத்மாகாந்தி அவதரித்தார். காந்தியடிகளின் தந்தையும் பாட்டனாரும் மிகவும் உயர்ந்த பதவியில் இருந்தவர்கள். காந்தியின் பாட்டனாரான உத்தமசந்த் என்பவர் போர்பந்தர் சமஸ்தானத்து அரசனிடம் திவானாக (அதாவது முதல் மந்திரி) இருந்தார்.



காந்தியடிகளின் தந்தையின் பெயர் கரம்சந்த் காந்தி. காந்தியடிகளின் அன்னையின் பெயர் புத்திராவதியார்.

ஒருசமயம் காந்தியடிகளின் பாட்டனாருக்கும் அந்தஸமஸ்தான ராணிக்கும் ஒரு விஷயத்தில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிட்டது. எனவே உத்தமசந்தர் அந்த சமஸ்தானத்திலிருந்து விலகி ஜூனாகாத் என்ற மற்றோர் சமஸ்தானத்திற்குச் சென்று அந்த சமஸ்தான நவாபினிடம் ஊழியம்செய்து வந்தார். காந்தியின் தந்தையான கரம் சந்த் காந்தியும் போர்பந்தர் சமஸ்தானத்தில் சிலகாலம் வரையில் திவானாக இருந்து வந்தார். ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு இவருக்கும் அந்தஸமஸ்தான அதிபதிக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகவே அவர் அந்த ஸமஸ்தானத்தைவிட்டு, இராஜகோட் என்ற ஸமஸ்தானத்திற்குச்சென்று அந்தஸமஸ்தான மன்னரிடத்தில் முதன் மந்திரியாக அமர்ந்து வேலைபார்த்து வந்தார். கரம்சந்த் காந்தியினிடத்தில் அந்தஸமஸ்தான மன்னருக்கு அளவுகடந்த அன்பும் பிரியமும் ஏற்பட்டன. ஆகவே அவன் இவருக்கு ஏராளமான பூமியை ஜாகீராக (இனமாக) அளித்தான். அதை அவர் ஏற்றுக்கொள்ள விரும்பினாரில்லை. கடைசியில் சிலநண்பர்கள் வற்புறுத்த அதற்கிணங்கி மன்னர் தமக்கு ஜாகீராக அளித்த நிலத்தில் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டார். காந்தியடிகளின் தந்தை ஒழுக்கமுடையவராகவும், சத்திய சீலராகவும், அஞ்சாநெஞ்சினராகவும்

இருந்து வந்தார். காந்தியின் தாயாரோ ஒழுக்கத்திலும், தெய்வபக்தியிலும் சிறந்த உத்தமி; மதத்தில் மிகுந்த பற்றுடையவள்; தர்மசிந்தனை மிகுந்தவள்; பர்த்தாவின் மனங்கோணாது நடக்கும் பதிவ்ரதை. இப்படிப்பட்டவர்களுக்குப் பிறந்த குழந்தையைப் பற்றிக்கேட்கவும் வேண்டுமோ?

நமது காந்திக்கு மோகனதாஸ் என்றுபெயர். அவருடன் கூடப்பிறந்தவர்கள் இருவர். மோகனதாஸே எல்லோரிலும் சிறியவர். புத்திராவதியார் தமது குமாரரான மோகனதாஸைக் குழந்தைப்பருவ முதல் நன்னெறியில் பழக்குவதிலேயே கவனஞ் செலுத்தி வந்தார்கள்.

## கல்வி

முதல் முதலில் போர்பந்தரிலுள்ள பாடசாலையில் சேர்ந்து மோகனதாஸ் கல்விபயின்று வந்தார். பின்பு அவரது தாய்தந்தையர் அந்தஸமஸ்தானத்திலிருந்து இராஜுகோட்டிற்குச் செல்ல நேரிட்டது. ஆகவே மோகனதாஸ் இராஜுகோட்டிலுள்ள பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றுவந்தார். பன்னிரண்டாவது வயதிலேயே மோகனதாஸுக்கு அவரது பெற்றோர்கள் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் என்ற மாதரசியை மணஞ்செய்து வைத்தனர்.

காந்தியின் தந்தையார் பகவத்கீதையை நன்றாகப் படித்திருந்தார். அவருக்குப் பொருளாசை யென்பது கொஞ்சமுமில்லை. அவர் இறப்பதற்கு முன்



தமது சொத்தில் பெரும்பாகத்தை தருமவழியில் செலவு செய்தார். மோகனதாஸ் குழந்தையாக இருந்தபொழுது அவருடைய வீட்டிற்கு அடிக்கடி சிறந்த வித்வான்களும், அறிஞர்களும் வந்து பலசிறந்த விஷயங்களைப்பற்றி உபந்யசிப்பது வழக்கம். ஆகவே இளமை முதல் காந்தி யடிகள் மதப்பற்றும், ஒழுக்கமும் நிறைந்து விளங்கினார். புராணங்களைப் படிப்பதிலும், பகவத்கீதையைப் படிப்பதிலும் அவருக்கு விருப்பமதிகம். கல்விகற்கும் காலத்திலேயே அவர் சிறந்த மனவுறுதி யுள்ளவராக விளங்கினார். பொய் சொல்லும் வழக்கத்தை மோகனதாஸ் தமது இளமைப்பருவம் முதல் மிகவும் வெறுத்து வந்தார். தான் செய்யவேண்டிய கடமைகளில் ஏதேனும் தவறு ஏற்படின் அதற்குப் பிராயச்சித்தமாக அவர் தம்மையே வருத்திக்கொள்ளுவது வழக்கம். சிறுவயது முதல் அவர் தமது அன்னையின் சிறந்த வழிகளைப் பின்பற்றி நடந்துவந்தார். பிற்காலத்தில் அவர் நல்லொழுக்கத்திலும், அறிவிலும் சிறந்து விளங்குவதற்கு அவரது அன்னையே முக்கிய காரணம் என்று கூறுவதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

மோகனதாஸ் தனது 17வது வயதில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் சிறப்புடன் தேறினார். பின்பு அவர் கொஞ்சகாலம் பவநகரில் உள்ள ஸியாமளதாஸ் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றுவந்தார். அவருக்கு பத்தொன்பது வயது ஆனதும் இங்கிலாந்து சென்று

பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கவேண்டுமென்கிற எண்ணம் உண்டாயிற்று. அவருடைய அன்னையும், உறவினரும் மதப்பற்று மிகுந்தவர்களாகையினால் அவர்கள் அதை மிகவும் ஆக்ஷேபித்து வந்தனர். ஆனால் மோகனதாஸ் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கும் விஷயத்தில் ஒரே பிடிவாதமாயிருந்தார். மேனாட்டில் குடியும், புலால் உண்ணுதலும், விபசாரமும் அதிகமென்று கேள்விப்பட்ட ஸ்ரீமதி புத்திராவதியார் மிகவும் வருந்தினார். அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. தமது குமாரன் அங்கே சென்றால் கெட்டுப்போய் விடுவானோ என்று பயந்தார்கள்: மோகனதாஸ் பிடிவாதமாக இருந்தபடியால் அவருடைய அன்னையும் கடைசியில் அவரது விருப்பத்திற்கு இணங்கும்படி நேரிட்டது. ஆனால் அந்த அம்மையார் ஒரு ஜயினத்துறவியின் முன்னிலையில் மோகனதாஸினிடத்திலிருந்து மூன்று பிரதிக்ஞைகளை வாங்கிக்கொண்டாள். காந்தியடிகள் தாம் இங்கிலாந்து தேசத்தில் புலால் உண்ணுவதில்லை, மதுபானம் செய்வதில்லை, பிறமங்கையருடன் விபசாரம் செய்வதில்லையென்று தமது அன்னைக்கு மூன்று வாக்குறுதிகளைச்செய்து கொடுத்தார். இந்தவாக்குறுதிகளைச்செய்து கொடுத்தபின்பே அவரது அன்னையார் மனந்தேறியவராய் இங்கிலாந்து செல்ல அவருக்கு விடை அளித்தார்.



## இங்கிலாந்தில் அவரது வாழ்க்கை

1888-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் மோகனதாஸ் காந்தி லண்டன்மா நகரம் போய்ச்சேர்ந்தார். பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிப்பதில் அவர் கவனிக்கவில்லை. ஆனால் அங்குள்ள மேனாட்டவரின் நடையுடை பாவனைகளைக்கண்டு மயங்கிவிட்டார்; மேனாட்டவரைப்போல் நடையையும் உடையையும் பூண்டு காலங்கழித்தார். மேனாட்டவரைப்போல் நாட்டியம் பழகிக்கொண்டார். அவர்களைப்போல் பாடவும் கற்றுக்கொண்டார். பிடில் வாசிக்கவும்; பிரெஞ்சு பாஷைபேசவும் கற்றுக்கொண்டார். ஆனால் சீக்கிரம் இவைகளிலிருந்து அவருடைய மனம் திரும்பிவிட்டது. இப்படியிருக்க ஒரு நாள் இவரது நண்பர்கள் இவரை ஒரு விருந்துக்கு அழைத்தனர். மோகனதாஸும் அந்த விருந்திற்குச் சென்றார். அந்த விருந்தில் புலாலுணவு வழங்கப்பட்டது. அதைக் காந்தி கண்ணால் கண்டார். கண்டதும் அவருக்கு அவரது அன்னையின் எச்சரிக்கை ஞாபகத்திற்கு வந்தது. தாம் தமது அன்னைக்குச்செய்து கொடுத்த வாக்குறுதிகளை நினைத்துக்கொண்டார். உடனே விருந்தைத் தொடாமல் எழுந்து வெளியேசென்றார். இதனால் அவருடைய நண்பர்களுக்கு அவரிடத்தில் மிகுந்த வருத்தமேற்பட்டது. அதைக் காந்தி பொருட்படுத்தினாரில்லை. பின்பு அவர் தாம் அனுஷ்டித்துவந்த வாழ்க்கையை வெறுத்தார். ஓர் இந்தியனைப்போல் உடை அணிவதற்கும்

சாப்பிடுவதற்கும் ஆரம்பித்தார். தமது உணவைத் தாமே சமைத்துக்கொண்டு அடக்கமாக வாழத் தொடங்கினார். லண்டன்மா நகரத்தில் ஏற்பட்டிருந்த மரக்கறி சங்க அங்கத்தினர்கள் அவருக்குச் சிநேகமாயினர். அவர் மரக்கறி போஜனத்தின் பெருமையைப்பற்றிக் கூறப்பட்டுள்ள நூல்களையெல்லாம் படித்தார்; அச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து உழைத்து வந்தார்; கிறிஸ்தவ மதத்தைப்பற்றிய புஸ்தகங்களையெல்லாம் படிக்கத்தொடங்கினார். பிரம்மஞான சங்க அங்கத்தினர்கள் பலர் அவருக்கு நண்பராயினர். மற்ற மதசம்பந்தமான புஸ்தகங்களையும் அவர் அடிக்கடி படிப்பதுண்டு. பரீட்சைக்கான பாடங்களைப்படித்து வந்ததுடன் ஓயாமல் பல மதநூல்களை ஆராய்ச்சிசெய்து வந்த அவருக்கு இந்தியப் பெரியாரான தாதாபாய் நௌரோஜியின் சிநேகம் கிடைத்தது. தமக்குக் கிடைத்த அவகாச வேளைகளில் மோகனதாஸ் காந்தி அப்பெரியாருடன் பல அரிய விஷயங்களைப்பற்றிக் கலந்துபேசி வாதித்து வந்தார். பல அறிஞர்களின் சாவகாசம் கிடைக்கப் பெற்றதனால் அவரது வாழ்க்கையும் நோக்கங்களும் உயர்ந்தவை களாகிவிட்டன. குறுகிய எண்ணங்களையும், அற்பத்தனமான காரியங்களையும் அவர் அறவே வெறுத்து வந்தார்.

## பாரிஸ்டர் வேலை

பின்பு அவர் பாரிஸ்டர் பரீட்சையில் சிறப்புடன் தேறினார். பாரிஸ்டர் பரீட்சையில் தேறிய



பிறகு 1891ம் வருஷத்தில் அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே அவரது அன்னையார் இறந்துபோனார். தமக்குப் பல அரியவிஷயங்களைப் போதித்து நல்வழிப்படுத்திய அன்னையார் இறந்ததைக் கேட்டு அவர் பெரிதும் வருந்தினார். முதல் முதலில் அவர் இராஜ்கோட் சமஸ்தானத்தில் கொஞ்ச காலம் வரையில் பாரிஸ்டராக நியாயவாதித் தொழிலை நடத்தி வந்தார். பிறகு அங்கிருந்து அவர் பம்பாய் நகரத்திற்குச் சென்று அங்கு தமது தொழிலை நடத்துவதற்கு ஆரம்பித்தார். தமது சட்ட ஞானத்தை வளர்த்துக் கொள்ள அவர் மிகவும் கஷ்டப்பட்டு பல சட்ட நூல்களைப் படித்துவந்தார். அக்காலத்திலேயே இந்து மதத்தின் வேத சாஸ்திர நூல்களையெல்லாம் அவர் மிகவும் நுணுக்கமாக ஆராய்ச்சிசெய்து வந்தார். பம்பாயில் இருந்த காலத்தில் அவருக்கு கூர்ஜர நாட்டின் அறிஞராகவும், கவிஞராகவும் விளங்கிவந்த ராஜசந்திரராவ்ஜிபாய் என்ற பெரியாரின் நட்புக் கிடைத்தது. அப்பெரியார் தாம் சொல்வதைப்போல் செய்கையில் நடந்து காட்டக்கூடியவர். அவரது நட்பு காந்தி அடிகளின் பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் துணை புரிந்ததென்றே சொல்லலாம்.

## தென் ஆப்பிரிக்கா செல்லல்

அக்காலத்தில் போர்பந்தரில் இருந்த ஒரு கம்பெனிக்கு தென் ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டோரியா என்ற நகரில் ஒரு வியாபாரச்சாலை இருந்தது. அங்கே

னின் அக்கம்பெனிக்கு பெரியவழக்கொன்று ஏற்பட்டது. அதற்கு வக்கீலாக இருந்து தங்களது வழக்கை நடத்தும்படி இந்தியாவிலிருந்த அக்கம்பெனியின் சொந்தக்காரர்கள் காந்தி அடிகளைக் கேட்டுக் கொண்டார்கள். காந்தி அடிகளும் அங்குச்சென்று அந்த வழக்கை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டார். 1893ம் வருஷத்தில் அவர் அந்த வழக்கை நடத்துவதற்காகத் தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றார். முதல் முதலில் அவர் தென் ஆப்பிரிக்காவில் இருக்க வேண்டுமென்று அங்குச் சென்றாரில்லை. எனினும் அவர் அங்குச் சென்றதும் அங்குள்ள இந்தியர்களின் கேவல நிலைமையைக்கண்டு வருந்தி அவர்களின் நன்மைகளைக் கருதி உழைப்பதற்கு ஆரம்பித்தார்.

## தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை

நமது நாட்டிலிருந்து பலர் கூலிவேலை செய்து தங்களது காலத்தைக் கழிக்கலாமென்று தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றனர். தென் ஆப்பிரிக்காவில் அவர்களுக்குப் பலவித கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்கள் அங்குள்ள ஐரோப்பியர்களினால் கேவலம் ஆடுமாடுகளைப்போல் நடத்தப்பட்டு வந்தனர். அவர்கள் அந்த எளிய இந்தியர்களை மனிதர்களாக நடத்தினார்களில்லை. அதனால் அந்த எளிய இந்தியர்களின் கஷ்டங்கள் நாளுக்குநாள் அதிகமாகி வந்தன. டிரான்ஸ்வால் முதலிய பிரதேசங்களை ஆண்டுவந்த போயர் அரசாங்கத்தார் இந்தியர்களைப் பலவிதத்திலும் மிகவும் துன்



புறுத்திக் கொடுமையாக நடத்திவந்தனர். இந்தியர்களுக்கு யாதொரு உரிமையுமில்லை. காந்தி அடிகள் அங்குச் சென்றதும் முதல் முதலில் வெள்ளையர்களினால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். தம்மைத் தாக்கியவர்களை அவர் திருப்பித் தாக்க முயலாமல் பொறுமையுடன் அந்தக் கஷ்டங்களையெல்லாம் ஏற்றுச் சகித்தார். இந்தியர்களின் கேவலமான நிலைமை விளங்குவதற்கு இந்தச் சம்பவமே அவருக்குப் போதிய உதாரணமாக விளங்கியது. இதுமாத்திரமல்ல; மற்றும் பல சந்தர்ப்பங்களில் அவர் அங்குள்ள வெள்ளையர்களினால் மிகவும் இழிவாக நடத்தப்பட்டார்.

எந்த வழக்கின் பொருட்டு அவர் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றாரோ அந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு முடிவடைந்தது. பின்பு அவர் இந்தியாவுக்குத் திரும்புவதற்குத் தயாராயிருந்தார். அப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் வாக்குரிமையை ரத்துசெய்வதற்கு ஒருசட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் அதன் விபரம் வெளியிடப்பட்டிருந்தது. அதைக் காந்தி அடிகள் படித்துத் தெரிந்துகொண்டார். இந்தியர்களைக் கெடுக்க மற்றும் பல சட்டங்கள் செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கேள்விப்பட்டார். டர்பான் நகரில் காந்தியடிகளை உபசரிக்க ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் காந்தியடிகள் தமது நாட்டவர்களுக்கு விரோத

மாகச் செய்யப்படுகின்ற முயற்சிகளையும், காரியங்களையும் நன்கு விளக்கி, இந்தியர் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும், உத்தேசம் செய்யப்பட்ட சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென்று அங்குள்ளவர்கள் அனைவரும் பலமாக ஆக்ஷேபிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். அங்கிருந்த இந்தியர்கள் அனைவரும் அவரையே தங்களுக்குத் தலைவராக இருந்து எல்லாக் காரியங்களையும் செய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். அவரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார். காந்தியடிகள் உடனே அந்த விஷயமாக ஒரு மனுவைத் தயார் செய்து அதை அரசாங்கத்தாருக்கு அனுப்பினார். ஆனால் அந்த மனுவின் மூலமாக இந்தியர்களின் காரியங்கள் ஒன்றும் நிறைவேறவில்லை. அது முதல் அங்குள்ள இந்தியர்களுக்குள் சுதந்தர உணர்ச்சி வலுப்படுவதற்கு ஆரம்பித்தது. இந்தியர்களின் உரிமைகளைக் காப்பதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு, காந்தியடிகளை நேட்டாலிலேயே இருந்து தொழில் நடத்தும்படி நேட்டால் மாகாணத்தில் வசித்துவந்த இந்தியர்கள் கேட்டுக்கொண்டார்கள். காந்தியடிகளும் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி நேட்டால் மாகாணத்தின் தலைநகரான டர்பான் நகரிலேயே தமது பாரிஸ்டர் தொழிலை நடத்துவதற்கு ஆரம்பித்தார். சட்டத்தில் அவருக்கு இருந்து வந்த சிறந்த ஞானமும் கூர்மையான அறிவும் அவரை அங்கிருந்த பாரிஸ்டர்களு



க்குள் சிறந்து விளங்கும்படி செய்தன. இந்தியர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும், அவரிடமே தங்களது வழக்குகளைக் கொடுத்துவந்தனர். காந்தியடிகள் தமது நியாயவாதித் தொழிலை நடத்துவதுடன் நின்றுவிடவில்லை. ஆனால் இந்தியர்களின் உரிமைகளைக் காத்து அவர்களை முன்னேறும்படி செய்யப் பலதுறைகளிலும் உழைத்துவந்தார். நேட்டாலிலுள்ள இந்தியர்கள் கஷ்டப்பட்டுக் கூலிவேலைசெய்தே தங்களது ஜீவனத்தை நடத்திவந்தனர். அவர்களைச் சீர்திருத்தி ஒற்றுமைப்படுத்துவதற்கு ஒரு பொதுச்சபையையும், கல்விச் சங்கத்தையும், முதல் முதலில் காந்தியடிகள் ஏற்படுத்தினார். பின்பு, அவர் தமது மனைவி மக்களை அழைத்துப் போவதற்காக 1896-ம் வருஷம் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

## பொதுஜன ஊழியம்

இந்தியாவுக்கு வந்ததும் பம்பாய், புனா, சென்னை முதலான நகரங்களுக்கு அவர் சென்று தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் கஷ்டங்களையும், துன்பங்களையும்பற்றி விளக்கிப் பொதுஜனங்களுக்குப் பல உபந்நியாசங்களைச் செய்தார். பல இந்தியத் தலைவர்களைக்கண்டு அவர்களுடன் தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் விஷயத்தைப்பற்றிக் கலந்துபேசினார். தென் ஆப்பிரிக்கா இந்தியரின் நன்மையைக் கருதுகின்றவர்கள் செய்யவேண்டிய காரியங்கள் எவை என்பதையும்

அவர் வெளியிட்டார். 1896-ம் வருஷம் நவம்பர் மாதம் அவர் தமது மனைவி குழந்தைகளுடன் தென் ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றார். இவர்கள் சென்ற கப்பலுடன் இந்தியர்கள் நிறைந்த மற்றொரு கப்பலும் சேர்ந்து ஆப்பிரிக்கா தேசத்தின் கரைக்கு வந்தது. ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் இவர்களைக் கப்பலிலிருந்து இறங்கவிடாமல் தடுத்தனர். நேட்டால் அரசாங்கமும் அவர்களுக்குத் துணையாக இருந்தது. இந்தியர்கள் கப்பலைவிட்டு இறங்கினால் வெள்ளையர்கள் அவர்களுக்குத் துன்பம் விளைவிப்பார்களென்று தோன்றியது. பின்பு ஓர் அரசாங்க அதிகாரி வார்த்தைகொடுத்ததின்மேல் இந்தியர்கள் தைரியமாகக் கப்பலிலிருந்து இறங்கினார்கள். காந்தியடிகள் கப்பலில் இருந்து இறங்கியதும் நேராக அவர் தம் மனைவி குழந்தைகளுடன் ருஸ்டம்ஜி என்பவரின் வீட்டிற்குச்சென்றார். இடையில் அவரை இந்தியர்களில் பலர்கூடிக் கொடுமையாகத் தாக்கிப்புடைத்தனர். ஆனால் அப்பொழுது ஓர் ஐரோப்பிய போலீஸ் சூப்பிரின்டெண்டின் மனைவியார் குறுக்கிட்டுக் காந்தியைக் காப்பாற்றினார். இந்தியாவில் காந்தியடிகள் பேசிய வார்த்தைகளை "ராய்டர்" செய்திக் கம்பெனியார் தவறாக அறிவித்ததே இதற்குக் காரணமாகும். காந்தி அடிகள் தம்மைத் துன்புறுத்திய இந்தியர்களின் மீது சிறிதும் கோபம் கொண்டாரில்லை. அஹிம்சை, சத்தியம், சாந்தம், முதலிய குணங்களை அக்காலத்தில் அவருடைய வாழ்க்கையில் சிறந்து விளங்கின.



பாரிஸ்டர் வேலையில் அவருக்கு அதிகமான வருமானம் கிடைத்தது. உண்மைக்குமாறான வழக்குகளை அவர் ஏற்றுக்கொள்வதுமில்லை; நடத்துவதுமில்லை. கட்சிக்காரர்களின் வழக்குகள் பொய்யானவைகள் என்று தோன்றினால் தாம் விலகும்படி நேரிடும் என்று அவர் தமது கட்சிக்காரர்களிடத்தில் முதலிலேயே சொல்லிவிடுவது வழக்கம். 1899-ம் வருஷத்தில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள போயர்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினருக்கும் யுத்தம் ஏற்பட்டது. அதில் காந்தியடிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் துணையாகநின்று வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தார். பிரிட்டிஷார் போயர் யுத்தத்தில் வெற்றியடைந்ததும், டிரான்ஸ்வால் பிரதேசம் அவர்களது ஆதிக்கத்தின்கீழ் வந்தது. புதிய டிரான்ஸ்வால் அரசாங்கத்தார் ஆசிய இலாக்கா என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி இந்தியர்களை ஒதுக்குவதற்கு ஆரம்பித்தார்கள். டிரான்ஸ்வாலிலுள்ள இந்தியர்களுக்குப் பலவிதமான புதிய கஷ்டங்கள் ஏற்பட்டன. நேட்டாலிலும் இந்தியர்களுக்கு விரோதமாக உணர்ச்சி வலுத்தது. காந்தி மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பினார். தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு வேறு தலைவர்கள் இல்லாமல் போய்விட்டது. எனவே அவர்கள் மீண்டும் காந்தியடிகளை தென் ஆப்பிரிக்காவுக்கு வரும்படி கேட்டுக்கொண்டனர். அவர்களின் முறையீட்டிற் கிணங்கி காந்தி 1903 வருஷம் ஜனவரி மாதம்

பிரிட்டோரியா போய்ச்சேர்ந்தார். இந்தியர்களின் உரிமைகளைக் காக்கும் போர் முக்கியமாக டிரான்ஸ்வாலில் நடக்கவேண்டியதாக இருந்ததால் அவர் முதலில் தம்மை டிரான்ஸ்வால் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வக்கீலாகப் பதிவு செய்துகொண்டார். முதலில் அங்கேயே இந்தியர்களின் கௌரவத்தையும், உரிமைகளையும் காக்க சாத்விகக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்தியர்களுக்கு அடிக்கடி பல பொது விஷயங்களைப் பற்றிய விபரங்களைத் தெளிவாக எடுத்துரைக்க "இந்தியன் ஒபீனியன்" என்ற பெயருடன் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையில் ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, தமிழ் முதலிய பாஷைகளில் விஷயங்கள் வெளியிடப்பட்டன. பொதுஜன நன்மையைக்கருதி நடத்தப்பட்டு வந்த அந்தப் பத்திரிகையினால் அவருக்கு லாபம் சிறிதும் ஏற்படவில்லை. ஆனால் அவருக்கு அதனால் பொருள்செலவுமட்டுமே ஏற்பட்டு வந்தது. செலவையெல்லாம் அவர் தனது சொந்தப் பணத்திலிருந்தே செய்துவந்தார். பின்பு அவருக்கு ருஷிய ஞானியாக விளங்கிய டால்ஸ்டாயினிடத்தில் அளவுகடந்த மதிப்பும் அன்பும் ஏற்பட்டன. எனவே அவர் டால்ஸ்டாயின் வாழ்க்கையைப் பின்பற்றி "பீனிக்ஸ் செட்டில்மெண்ட்" என்றபெயருடன் கூடிய ஓர் ஆச்ரமத்தையும் நடத்துவதற்கு ஆரம்பித்தார். கஷ்டப்பட்டு உழைத்துச் சாதாரணமான வாழ்க்கையை நடத்துவதற்காகவே அந்த ஆச்ரமம் ஏற்ப



டுத்தப்பட்டது. 1906-ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஸுலு என்ற வகுப்பினர்களுடன் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயத்தில் காந்தியடிகள் இந்திய வைத்திய உதவிப்படை ஒன்றை ஏற்படுத்தி அந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்கு விசேஷ உதவி புரிந்தார்.

## ஆசியாக்காரர் பதிவுச் சட்டம்

ஆசியாக்கண்டத்திலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து குடியேறியவர்களை ஒழிக்க வேண்டுமென்ற இயக்கம் தென் ஆப்பிரிக்காவில் எங்கணும் நாளுக்குநாள் அதிகமாகிவந்தது. அதன்பயனாக 1906-ம் ஆண்டில் "ஆசியாக்காரர் பதிவுச் சட்டம்" என்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி தென் ஆப்பிரிக்காவில் வந்து குடியேறியுள்ள ஆசியாக்காரர்கள் கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். தென் ஆப்பிரிக்காவில் கூட்டங் கூட்டமாக ஆசியாக்காரர்கள் குடியேறாமல் தடுக்கவே அச்சட்டம் இயற்றப்பட்டதென்று முதலில் அறிவிக்கப்பட்டது. குடியேறும் முறையை ஓர் ஏற்பாட்டிற்குட்படுத்தும் விஷயத்திற்குத் தாங்கள் சம்மதிப்பதாகவும், ஆனால் கைவிரல் பதிவுசெய்வது தங்களை அவமதிக்கக்கூடியதாக இருப்பதால் அந்த நிபந்தனையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் இந்தியர்கள் பலமாக ஆக்ஷேபித்தார்கள். அச்சட்டத்திற்கு அரசர்பெரு

மான் தமது சம்மதத்தைக் கொடுக்குமுன் இந்தியரது ஆக்ஷேபனைகளைக் கூறி அதை ஒழித்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் காந்தியடிகள் ஒரு முஸ்லீம் கனவானுடன் இங்கிலாந்து சென்றனர். இங்கிலாந்தில் அவர்கள் அதிகாரிகளைக்கண்டு அந்த விஷயங்களைப் பற்றி நன்கு எடுத்துக்கூறினார்கள். ஆனால் அவர்களது முயற்சி பலன் பெறவில்லை. அரசர் பெருமானின் சம்மதத்தைப்பெற்று அச்சட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் தங்களை அவமதிப்பதற்காக நிறைவேற்றப் பட்டிருக்கின்ற அச்சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல் மீறிநடந்து அதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைஏற்றுக்கொள்ளுவதே சிறந்தமுறை யென்று காந்தியடிகள் யோசனை கூறினார்; இந்தியர்களும் அவரது யோசனைகளை ஏற்று அதன்படி நடப்பதாக முன்வந்தனர்.

## சாத்விக எதிர்ப்பு

1906-ம் வருஷம் செப்டம்பர் மாதம் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் காந்தியடிகளின் தலைமையின் கீழ் சாத்விக எதிர்ப்புப்போரை ஆரம்பித்தனர். அந்தப்போராட்டத்தில் சைனதேசத்தவர்களும் மற்றவர்களும் சேர்ந்துகொண்டனர். கேவலம் குற்றவாளிகளைப்போல் கைவிரல் அடையாளம் கொடுப்பதை இந்தியர்களும், மற்ற ஆசியாக்காரர்களும் மறுத்தனர். கைவிரல் அடையாளம் கொடுக்க மறுத்தவர்களையெல்லாம் அந்தேச அரசாங்கத்தார் சட்டப்படி தண்



டிக்க ஆரம்பித்தார்கள். தலைமைவகித்து சாத்விக எதிர்ப்புப் போரை நடத்திய மகாத்மா காந்தி தாமே இந்தியர்களின் பொருட்டு எல்லாக் கஷ்டங்களையும் அனுபவிப்பதென்று தீர்மானித்துக் கொண்டார். பின்பு இந்தியர்கள் எல்லோரையும் ஒன்றுகூட்டி அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி அவர் நன்கு விளக்கிக் கூறினார். கைவிரல் அடையாளங்கொடுக்க மறுக்கவே அதிகாரிகள் சட்டப்படி காந்தியடிகள் முதல் எல்லா இந்தியர்களையும் கைது செய்து சிறையிலிட்டனர். காலியாக இருந்த சிறைச்சாலைகளெல்லாம் கைதுசெய்யப்பட்ட இந்தியர்களால் நிரப்பப்பட்டன. பின்பு நியாயஸ்தலத்திலே கைவிரல் அடையாளம் கொடுக்க மறுத்ததற்காக விசாரணை நடைபெற்றது. காந்தி அடிகளுக்கு இரண்டு மாதம் சிறைவாச தண்டனை விதித்தார்கள். காந்தியடிகள் அத்தண்டனையைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் குற்றத்திற்கு ஏற்றதண்டனை விதிக்கலாமென்று கூறினார். ஆத்மசக்தி முன்பு எதுவும் நிற்கமுடியாது என்பதில் ஏதாவது சந்தேகமுண்டா? சாத்விக எதிர்ப்புக்கு முன்பு அதிகாரிகளின் காரியம் ஒன்றும் பலிக்கவில்லை. எப்படியாவது சமாதானமாய்ப் போய்விடலாமென்று நினைத்தார்கள். இந்தியர்களுக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டம் நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டால் தாங்கள் யாவரும் தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுவ

தாக இந்தியர்கள் கூறினார்கள். அரசாங்கத்தார் அதற்கு இணங்கிவரவே முதல்முதலில் காந்தியடிகள் சென்று தம்மைப் பதிவுசெய்துகொண்டார். சாத்வீக எதிர்ப்பில் சேர்ந்திருந்த ஒரு பட்டாணிக்குக் காந்தியடிகள் இப்படிச் செய்தது விரோதமாகத் தோன்றியது. எனவே அவன் அவரை வழியில் மறித்துக்கொண்டு பலமாக அடித்தான். அவனது அடியைப் பொறுக்க முடியாமல் காந்தியடிகள் மூர்ச்சையாக விழுந்துவிட்டார். அந்த அடியினால் அவருக்குப் பலத்தகாயம் ஏற்பட்டது. ஆனால் அவர் பொறுமையுடன் அவனை மன்னித்து அந்தக்கஷ்டத்தைச் சகித்துக்கொண்டாரேயன்றி அவன்மீது யாதொரு விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் பின்னர் அந்தப் பட்டாணி தான்செய்த குற்றங்களை உணர்ந்தான். அதற்காக வருந்தினான். காந்தியடிகளிடம் சென்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். பிறகு அவன் அவரது தத்துவங்களை ஏற்றுத் தனது வாழ்க்கையையே மாற்றிக்கொண்டான்.

இந்தியர்கள் எல்லோரும் தங்களைப் பதிவுசெய்து கொண்டபிறகு அரசாங்கத்தார் தாங்கள் வாக்களித்தபடி காரியங்களைச் செய்வதற்கு மறுத்துவிட்டனர். எனவே மீண்டும் சாத்வீக எதிர்ப்புப்போர் அதிதீவிரமாக இந்தியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியர்கள் ஆயிரக்கணக்காகச் சிறைக்குச் சென்றார்கள். தங்களுக்கு ஏற்பட்ட பலவிதக் கஷ்டங்களையும், அவர்கள்



பொறுமையுடன் சகித்துக்கொண்டார்கள். அந்ததேசத்து அரசாங்கத்தார் மீண்டும், காந்தி அடிகளுக்கு இரண்டு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். காந்தியடிகளும் அத்தண்டனையைச் சந்தோஷத்துடன் ஏற்று அனுபவித்தார். சிறையிலிருந்து விடுதலையடைந்தும் அவர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு இழைக்கப்படும், சகிக்கொணாத கஷ்டங்களைப் பற்றி இங்கிலாந்து இந்தியா முதலிய தேசத்திலுள்ள பொது ஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவிக்கப் பலரை அனுப்பினார்.

## தலைவரி

பல ஆண்டுகளாக இந்தியர்களில் பலர் தென் ஆப்பிரிக்காவுக்கு ஒப்பந்தக் கூலிகளாக அனுப்பப்பட்டு வந்தார்கள். அடிமைகளைப்போல் கசக்கி வேலை வாங்குவதற்காகவே இந்தியர்கள் அம்மாதிரி அனுப்பப்பட்டனர். ஆனால் முதலில் இவ்விஷயம் இந்தியாவிலிருந்தவர்களுக்குத் தெரியாது. ஒப்பந்தக்கூலிகளின் விஷயங்கள் இந்தியாவிலுள்ளவர்களுக்குத் தெரிந்ததும் அவர்களுக்கு அம்மாதிரி ஆட்களைச் சேர்த்து அனுப்பும் முறையின்மீது மனக்கொதிப்பும், வெறுப்பும், ஏற்பட்டன. காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலேயும் மற்ற தலைவர்களும் அந்த முறையை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்று பலமாகக் கிளர்ச்சிசெய்தனர். 1912-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தார் ஒப்பந்தக்கூலிகளைத் தென் ஆப்பிரிக்கா

வர்க்கு அனுப்பும் முறையை அறவே ஒழித்துவிட்டனர். தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலைமை நாளுக்குநாள் கேவலமாகிவந்தது. தங்களது ஒப்பந்தகாலம் முடிந்து தென் ஆப்பிரிக்காவிலேயே வசிக்க விரும்பிய இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் தலைக்கு 3 பவுன் தலைவரி விதித்தனர். இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவில் செய்துகொள்ளுகின்ற விவாகம் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தின் சட்டப்படி ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல என்று ஒரு நியாயஸ்தலத்தின் தீர்ப்பும் கொடுக்கப்பட்டது. இம்மாதிரியான பல நிர்ப்பந்தங்கள் இந்தியர்களின் சாத்வீக எதிர்ப்புப்போரை வலுப்படும்படி செய்துவிட்டன. கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு விஜயஞ்செய்தார். தலைவரி விதிப்பது நியாயமல்லவென்றும், அத்தவரியை நீக்கிவிடவேண்டியது அவசியமென்றும் அவர் அதிகாரிகளிடத்தில் வற்புறுத்திக்கூறினர். அதிகாரிகள் அத்தவரியை நீக்கிவிடுவதாக அவரிடம் உறுதி கூறினார்கள். ஆனால் தங்களது வாக்குறுதிகளுக்கு மீறி அவர்கள் அத்தவரியை நீக்க மறுத்துவிட்டார்கள். போராட்டம் மறுபடியும் கடுமையாக ஏற்பட்டுவிட்டது. இந்தியப் பெண்மணிகளும் அந்தப்போரில் கலந்து கஷ்டங்களை ஏற்றுச் சகிக்க முன்வந்தார்களென்றால் அந்தப் போரின் கடுமையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இந்தியர் தலைவரி செலுத்த வேண்டுமென்பது ஒழிய



வேண்டும்; சட்டத்தில் ஜாதிமத பேதம் கூடாது; இந்தியர்கள் செய்துகொள்ளுகின்ற விவாகங்களை ஒப்புக்கொள்ளவேண்டும்; அவர்களை நியாயமாகவும் கண்ணியமாகவும் நடத்த வேண்டுமென்பதற்காகவே சாத்விகப்போர் தீவிரமாக நடத்தப்பட்டது. பெண்களும், குழந்தைகளுடன் கூடிய ஸ்திரீகளும் மற்ற பெண்மணிகளும் அந்தப்போரில் சந்தோஷத்துடன் சிறைவாசத்தை ஏற்றுக்கொண்டார்கள். பெண்மணிகளுக்குத் தலைவியாக ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி சிறைவாசத்தை ஏற்று அனுபவித்தார்.

## தீவிர சாத்விகப்போர்

எல்லா இந்தியர்களையும் சேர்த்து சாத்விகப் போரின் உண்மையான பலத்தை வெளிக்காட்ட மகாத்மா காந்தி 1913-ம் வருஷத்தில் தீவிரமாக ஒரு புதிய சாத்விகப்போரை ஆரம்பித்தார். எல்லோரும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று எங்கும் செய்தி அனுப்பப்பட்டது. ஆங்காங்குள்ள இந்தியர்களும், இந்திய மாதர்களும், குழந்தைகளும், நியூகாஸில் என்ற நகரத்தில்வந்து ஏராளமாகக் கூடினார்கள். எல்லோரும் அமைதியாக டிரான்ஸ்வால் மாகாணத்திற்குள் செல்லுவது என்றும், அதிகாரிகள் கைது செய்து சிறையிலிட்டால் எல்லோரும் அதை ஏற்று அனுபவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. உடனே எல்லோரும் டிரான்ஸ்வால் மாகாணத்திற்குள் செல்லுவதற்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது அக்கூட்டத்

தில் ஒப்பந்தக்காரர்களாய் வேலை நிறுத்தம்செய்யச் சேர்ந்திருப்பவர்களில் பலரை அதிகாரிகள் கைது செய்து சிறையிலிட்டனர். பின்பு அவர்கள் டிரான்ஸ்வால் மாகாணத்திற்குள் செல்லுவதென்று கூட்டமாகச் சென்றார்கள். அந்தக் கூட்டத்தில் சுமார் மூவாயிரம் பேர்களுக்குமேல் இருக்கும். டிரான்ஸ்வால் மாகாணத்தை நெருங்கியதும் மீண்டும் ஒப்பந்தக்காரர்களில் பலர் கைதுசெய்யப்பட்டனர். டிரான்ஸ்வால் பிரதேச எல்லையில் சில போலீஸ்வீரர்கள் காவல்புரிந்து வந்தனர். இந்திய ஜனங்கள், எல்லோரும் கைதுசெய்யப்படுகின்றவரையில் டிரான்ஸ்வால் மாகாணத்திற்குள்செல்லுவது என்று தீர்மானித்துக்கொண்டு தைரியமாக டிரான்ஸ்வால் மாகாணத்திற்குள் பிரவேசித்துச்செல்ல ஆரம்பித்தனர். இதற்கிடையில் இந்தியாவிலிருந்து இந்திய மகாஜனங்கள் அனுப்பிய பணம்வந்து சேர்ந்தது. அந்தப்பணத்தைக்கொண்டு சாத்விகப் போரில் கலந்துள்ள இந்தியர்களுக்கு எல்லாம் ஆகாரம்முதலியன வழங்கப்பட்டன. இந்தியர்கள் அந்த மாகாணத்திற்குள் போய்க்கொண்டேயிருந்தார்கள். ஆனால் அரசாங்கத்தார் சும்மாவிராமல் மகாத்மாகாந்தியைக் கைதுசெய்தனர். பின்பு அவர் ஜாமீன்பேரில் விடுதலைபெற்றார். தம்மைத் தலைமையாகக் கொண்டிருக்கின்ற ஜனங்களைவிட்டகலக்கூடாதென்ற நோக்கத்துடனேயே காந்தியடிகள் ஜாமீன்பேரில் விடுதலை பெற்றார். காந்தியடிகளுடன் சென்ற மூவாயிரம்பேர்க



ளில் 122 பெண்மணிகளும், 50 குழந்தைகளும் இருந்தார்கள். வேறொரு நகரத்திற்கு எல்லோரும் போய்ச் சேர்ந்தவுடன் மறுபடியும் அங்குள்ள அதிகாரிகளால் ஒப்பந்தக் கூலிகளில் பலர் கைதுசெய்யப்பட்டனர். காந்தியடிகள் மீண்டும் கைது செய்யப்பட்டார். அதைக்கண்ட இந்தியர்கள் "எங்கள் காந்தியை விட்டாலன்றி நாங்கள் எல்லோரும் கோர்ட்டைவிட்டுச் செல்லமாட்டோம்" என்று பிடிவாதமாகச் சொன்னார்கள். எனவே மறுபடியும் நமது காந்தியடிகளுக்கு ஜாமீன்பேரில் விடுதலை கிடைத்தது. பின்பு காந்தியடிகளும் மற்ற இந்தியர்களும் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட இந்தியர்களையெல்லாம் அதிகாரிகள் தண்டித்துச்சிறைக்கனுப்பினார்கள். காந்தியடிகளுக்கு பதினைந்துமாதம் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தச் சங்கதிகள் எல்லாம் உலகமுழுவதும் பரவின. இந்தியாவில் இந்த விஷயமாக இந்தியர்களுக்குள் ஆத்திரமும், மனக்கொதிப்பும், உணர்ச்சியும் எழுந்தன. ஸ்ரீமான் போலக் என்ற ஆங்கிலப்பாதிரியாரும் கைதுசெய்யப்பட்டார். இதைக் கேட்டுசுரங்கத்திலுள்ள தொழிலாளர்களெல்லோரும் வேலைநிறுத்தம் செய்துவிட்டனர். இதேசமயத்தில் நேட்டாலிலுள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்து வந்தவர்களும் வேலை நிறுத்தஞ்செய்து விட்டார்கள். கரும்புத் தோட்டங்களில் வேலைநிறுத்தஞ் செய்த இந்தியர்களில் சிலர் அத்தோட்ட முதலாளிக

ளால் வேலை நிறுத்தஞ் செய்ததற்காகச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இச்சம்பவங்க ளெல்லாம் இந்தியாவிலுள்ள இந்தியர்களுக்குள் பலத்த உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன. இந்தியாவில் அப்பொழுது ராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு பிரபு தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையைக்கண்டு பயந்து அதை விசாரிக்க ஒரு சபையை நியமிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தந்தி கொடுத்தார். பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்த விஷயத்தில் முன்போல் அலட்சியமாக இராமல் மிக்க கவலையுள்ளவர்களாயினர். அதனால் தென் ஆப்பிரிக்கா அதிகாரிகளுக்குள் கலக்கம் உண்டாயிற்று. காரியம் தலைக்குமீறிப் போய்விடுமென்பதை அவர்கள் அப்பொழுதுதான் உணர்ந்துகொண்டார்கள். பின்பு விசாரணைக்கமிட்டி யொன்று ஏற்பட்டது. அத்துடன் ஸ்ரீமான்களான சி. எப். ஆண்ட்ரூஸ், பியர்ஸன் என்ற ஆங்கில நண்பர்கள் இருவரும் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று இந்தியரின் கட்சியை எடுத்து வாதித்தார்கள். கமிட்டியார் எல்லா விஷயங்களையும் நன்கு விசாரித்து தகுந்த சிபார்சுகளைச் செய்தனர். அவைகளை யெல்லாம் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டனர். ஆசியாக்காரர் பதிவுச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஒப்பந்தகாலம் முடிந்து அங்கே குடியேறிய இந்தியக் கூலிகளுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்டது



இந்தியரின் விவாகங்கள் சட்ட சம்மதமானவையென்று ஏற்றுக்கொள்ளப்பட்டன, 1914-ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் சாத்வீகப்போர் வெற்றியுடன் முடிவடைந்ததும் காந்தியடிகள் இந்தியாவுக்குப் பிரயாணமானார். அவர் இந்தியாவிற்குப் புறப்படுவதற்கு முன்பு அவருக்குத் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களும், ஐரோப்பியர்களும் செய்த உபசாரங்கள் எண்ணில. தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் காந்தியின் அரும் குணங்களைக் கண்டு மகிழ்ந்து அவரைப் பாராட்டி வழி அனுப்பினார்கள். எளிய வாழ்க்கையை ஏற்றுத் தேசத்தொண்டுசெய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்தார். அப்படிப்பட்ட பெரியார் இந்தியாவுக்கு வந்ததும் இந்தியர்கள் அவரைக் குதூகலத்துடன் வரவேற்று "மகாத்மா" என்று அழைத்தனர்.

## சத்தியாக்கிரஹ ஆச்ரமம்

இந்தியாவில் அவர் தமது கொள்கைகளைப் பின்பற்றி நடக்கின்ற மற்றவர்களுடன் சேர்ந்து தமது வாழ்க்கையை நடத்துவதற்காக ஆமதாபாத் நகரத்திலே சபர்மதி நதிக்கரையோரத்திலே சத்தியாக்கிரஹ ஆச்ரமம் என்ற பெயருடன் ஓர் ஆச்ரமத்தை ஏற்படுத்திக்கொண்டார். அந்த ஆச்ரமத்தில் வசித்து வருபவர்கள், எப்பொழுதும் உண்மையே பேசுதல்; அஹிம்ஸா தர்மத்தைப் பின்பற்றி பிறருக்கு மனதினால் கூட ஹிம்ஸை செய்யாதிருத்தல், பிரம்மசரிய ஒழுக்கத்தை

தவறாமல் அனுஷ்டித்தல், சாதாரண ஆகாரத்தை உட்கொள்ளல், தனது அவசியத்திற்கு மேற்கொண்டு பொருளை வைத்துக்கொள்ளா திருத்தல், சுதேசிய விரதத்தைக் கடைப்பிடித் தொழுகுதல், பயம் என்பதின்றி எப்பொழுதும் தைரியமாக இருத்தல் போன்ற பல சிறந்த விரதங்களை பின்பற்றி அவைகளை அனுஷ்டித்து வந்தார்கள். பின்னர் காந்தி அடிகள் அங்கேயே ஸ்திரமாகத் தங்கியிராமல் நாட்டின் பல பாகங்களுக்கும் அடிக்கடி சென்று நாட்டவர்களுடைய குறைகளை யுணர்ந்து அவைகளை நீக்குவதற்கு யோசனை கூறிவந்தார்.

## பொது ஜன ஊழியம்

முதல் முதலில் காந்தியடிகளுக்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் நம்பிக்கை இருந்தது. எனினும் அவர் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்து அடிக்கடி தம்முடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தார். எளியவர்களுக்கு உதவிசெய்யும் விஷயத்தில் அவர் எப்பொழுதும் பின் வாங்கியதேயில்லை. தேசத்தின் குடிசைத்தொழில்களை வளர்த்து நாட்டின் பொருளாதார நிலைமையை வலுப்படும்படி செய்யவேண்டுமென்று பெரிதும் முயன்று வந்தார்.

பிறகு, பீகார் மகாணத்தில் சம்பாரான் என்ற ஜில்லாவிலுள்ள அவுரித்தோட்டங்களில் வேலை செய்து வந்த எளியதொழிலாளர்களுக்குப் பலவித கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்கள், தோட்டங்



களின் நிலைமையைப் பரிசோதித்து தங்களது கஷ்டங்களை நீக்க உதவி செய்ய வேண்டுமென்று மகாத்மாகாந்தியை வேண்டிக்கொண்டார்கள். அடிகளும் அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி அந்தப் பிரதேசத்திற்குப் புறப்பட்டுச்சென்றார். அந்தப்பிரதேசத்திற்கு மாஜிஸ்டிரேட்டாக இருந்தவர் சம்பாரான் ஜில்லாவிற்குள் காந்தியடிகள் பிரவேசிக்கக்கூடாது என்று தடை உத்தரவொன்றைப் பிறப்பித்தார். காந்தியடிகள் அதைக்கேட்டு "என் மனச்சாட்சி எளியவர்களுக்கு உதவிசெய்ய சம்பாரான் ஜில்லாவுக்குச் செல்லும்படி கட்டளையிடுகின்றது. அதனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதா? அல்லது தங்களைப் போன்றவர்களின் தடை உத்தரவுக்குக் கீழ்ப்படிவதா? ஆகவே நான் தங்களது உத்தரவை மீறி நடக்கப்போகின்றேன். அதற்காகத் தாங்கள் எனக்கு எவ்விதத் தண்டனை விதித்தபோதிலும் அதை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன்" என்று அறிவித்தார். உடனே அதிகாரிகள் சம்பாரான் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் குறைகளைப் பரிசீலனைசெய்ய ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியில் மகாத்மா காந்தியும் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். கமிட்டியார் விசாரணைசெய்து விவசாயிகளுக்கு இன்னின்ன குறைகள் நீக்கப்பட வேண்டுமென்று சிபார்சுசெய்தனர். அந்தச் சிபார்சுகளெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டன.

## கெய்ரா ஜில்லாவில் பஞ்சம்

1918-ம் வருஷத்தில் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கெய்ரா ஜில்லாவில் விளைவு கெட்டுப்போய்ப் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அந்த ஜில்லாவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற நிலத்தீர்வையை வஜாசெய்துவிட வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் அந்தத் தீர்வையை வஜாசெய்ய மறுத்துவிட்டனர். கெய்ரா வாசிகள் இவ்விஷயத்தில் தங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று காந்தி அடிகளை வேண்டிக்கொள்ள அவரும் அதற்கு இணங்கி அங்கு சென்றார். பின்பு அவர் தாமே நேரில்சென்று வயல்களைப் பார்வையிட்டு அந்த ஜில்லாவாசிகளின் கோரிக்கை நியாயம் என்பதை அறிந்துகொண்டார். பின்பு அந்த ஜனங்களுக்குத் தலைமையாக நின்று அந்த வரியை வஜா செய்துவிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். அதிகாரிகள் என்னசெய்தபோதிலும் வரியை மறுத்துவிடும்படி அந்த ஜில்லாவாசிகளை வற்புறுத்தினார். அதிகாரிகள் வரியை வசூலிக்கப் பல விதத்திலும் முயன்று பார்த்தனர். ஆனால் அவர்களது முயற்சிகள் பலிக்கவில்லை. அந்த ஜில்லாவாசிகள் வரி செலுத்துவதில்லையென்று உறுதியாகப் போராடினார்கள். அதனால் ஏற்பட்ட கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். முடிவில் பம்பாய் அரசாங்கத்தார் அவர்களது வரியை வஜாசெய்யும்படி உத்தரவு பிறப்பித்தனர். ஜனங்கள்



வெற்றியடைந்தனர். பின்பு மகாயுத்தம் ஏற்பட்டது. காந்தி அடிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவியாகப் பல இந்தியர்களை இராணுவத்தில் சேர்ந்து உதவிசெய்யும்படி செய்தார்.

## ரௌலட் சட்டம்

மகாயுத்தம் முடிவடைந்தது. பிரிட்டிஷார் வெற்றியடைந்தார்கள். இந்தியர்கள் யுத்தத்தில் தங்களுக்குச் செய்த உதவிகளுக்கு யாதொரு நன்மையையும் அவர்கள் செய்ய விரும்பினார்களில்லை. ஆனால் 1919-ம் வருஷ ஆரம்பத்தில் இந்திய அரசாங்கத்தார் இந்தியர்களின் சுதந்திர உணர்ச்சிகளை ஒடுக்கி அவர்களை அடக்கி வேண்டுமென்ற நோக்கத்துடன் ரௌலட் சட்ட மசோதாக்கள் என்ற இரண்டு மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு முயன்றனர். ரௌலட் மசோதாக்களைப்பற்றிய விஷயங்கள் வெளியிடப்பட்டதும் காந்தியடிகள் அதை எதிர்த்து அதை ரத்துசெய்து விடும்படி வற்புறுத்தினார். அது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால் இந்தியர்களுக்கு உள்ள அற்ப சுதந்திரமும் இல்லாமற் போய்விடுமென்பதை விளக்கினார். ஏகாதிபத்தியத்தில் அவருக்கு இருந்துவந்த நம்பிக்கை அறவே ஒழிந்துவிட்டது. அந்தக் கொடிய ரௌலட் சட்டங்களை யொழிப்பதற்கு உடனே காந்தியடிகள் இந்தியாவில் சத்தியாக்கிரஹ இயக்கத்தை ஆரம்பித்தார். சாத்வீகமாகச் சட்டங்களை மீறி நடப்பதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகப் பலர்

கையெழுத்திட்டு காந்தியடிகளின் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். சத்தியாக்கிரஹதினம் குறிப்பிட்ட தினத்தில் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் ஜனங்களால் கொண்டாடப்பட்டது. அன்று ஜனங்கள் உபவாசமிருந்து வேலைகளை நிறுத்தி பின்பு கூட்டங்கள் கூடி ரௌலட் சட்டங்களைக் கண்டித்து அங்கங்கே தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். வட இந்தியாவில் சில நகரங்களில் சத்தியாக்கிரஹ தினம் குறிப்பிட்ட தினத்திற்கு ஐந்தாறு நாட்களுக்கு முன்பே கொண்டாடப்பட்டது. டில்லி மாநகரில் அந்த தினத்தில் போலீசாருக்கும் பொது ஜனங்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் சிலர் இறந்துபோயினர். பல ஜனங்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. இப்படி நடக்கும் சுமார் ஐம்பதினாயிரம் ஜனங்கள் அமைதியாகக் கூட்டங்கூடி ரௌலட் சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம்செய்தனர்.

அச்சமயத்தில் மகாத்மாகாந்தியும் அமைதிக் குறைவு ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்று பம்பாயிலிருந்து பஞ்சாபுக்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில் அரசாங்க அதிகாரிகள் அவரைப் பஞ்சாப் மாகாணத்திற்குச் செல்லக் கூடாதென்று தடுத்து பம்பாய்க்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இதைக் கேள்விப்பட்டதும் ஆமதாபாத் வாசிகள் ஆத்திரமடைந்து கலகம் செய்தார்கள்.



ஆமதாபாத் வாசிகள் கலகம் செய்த சமாச்சாரத்தை காந்தியடிகள் கேட்டதும் மிகவும் வருந்தினார். ஆமதாபாத் வாசிகள் ஒருநாள் உண்ணாவிரதமிருந்து கலகத்தால் காயமடைந்து இறந்தவர்களின் குடும்பத்தினரைக் காப்பாற்றுவதற்கு தலைக்கு அரை ரூபாய் வீதம் கொடுக்க வேண்டுமென்று காந்தியடிகள் கேட்டுக் கொண்டதுடன் தாமும் மூன்றுதினங்கள் வரையில் அதற்காக உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தார்.

## பஞ்சாப் படுகொலை

பஞ்சாப் மாகாணத்திலும் சத்தியாக்கிரஹதினம் அமைதியாகப் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. ஜனங்கள் உண்ணாவிரதத்தை யனுஷ்டித்து அம்மாகாணத்திலும் ரௌலட் சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்தனர். இடையில் அரசாங்கத்தார் பொது ஜனங்களின் ஆக்ஷேபணைகளையும், கண்டனங்களையும் கவனிக்காமல் இந்தியா சட்ட சபையில் ரௌலட் மசோதாக்களி லொன்றை நிறைவேற்றிவிட்டனர். பஞ்சாப் மாகாணத்தில் யாதொரு அமைதிக்குறைவும் ஏற்படவில்லை. ஏப்ரல் மாதம் 9-ந் தேதியன்று அமிர்தசரஸ் நகரில் இருந்து அதிகாரிகள் டாக்டர் கிச்சிலு, டாக்டர் சத்தியபால் ஆகிய தேசபக்தர்களை வெளியேற்றிவிட்டனர். தங்களது தலைவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று டிபுடி கமிஷனரைக் கேட்கப் பொதுஜனங்கள் அவரது வீட்டை நோக்கிச் சென்றனர். ஆனால் போலீசார் அந்த

பொது ஜனக்கூட்டத்தைத் தடுத்து அதிலிருந்தவர்களின்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன் பயனாகப் பத்துபேர்கள் இறந்துபோயினர். பின்பு மற்ற ஜனங்கள் வெறிகொண்டு கலகம் செய்யத் தலைப்பட்டனர். சிலர் அருகிலிருந்த அலையன்ஸ் பாங்கிக் கட்டிடத்தைத் தாக்கி தந்திக்கம்பிகளை அறுத்து சில அக்ரமங்களைச் செய்தனர். அதிகாரிகள் லாகூரிலிருந்து இராணுவப் படைகளை வரவழைத்து அமிர்தஸரஸை ராணுவ அதிகாரிகளிடம் ஒப்புவித்து விட்டனர். பின்பு அங்கு இராணுவசட்ட அமுல் நடைபெற்றது. சத்தியாக்ரஹத்தை அனுஷ்டித்து ரௌலட் சட்டத்தைக் கண்டிக்க ஏப்ரல் மாதம் 13-ந் தேதியன்று அமிர்தஸரஸிலுள்ள ஜாலியன் வாலாபாக் என்ற தோட்டத்தில் சுமார் பதினாயிரம் ஜனங்களடங்கிய ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இராணுவ அதிகாரியான ஜெனரல் டையர் முன் எச்சரிக்கை செய்யாமல் அங்கு கூடியிருந்தவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். அந்த நிரபராதிகளான ஜனங்களில் சுமார் 400 பேர்கள் இறந்துபோயினர். 1200 பேர்களுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டன. காயமடைந்த ஜனங்களுக்கு யாதொருவிதமான வைத்திய சிகிச்சையும்செய்யப்படவில்லை. லாகூர், குஜரான்வாலா, காஸுர், கூஜராத் முதலிய மற்றும் பல நகரங்களிலும் இராணுவச்சட்ட அமுலின் கீழ் ஜனங்கள் பலவிதமாக ஹிம்சிக்கப்பட்டுக் கொடுமைப் படுத்தப்பட்டார்



கள். பல இடங்களில் இருந்த நிரபராதிகளான ஜனங்களின் மீது இராணுவ வீரர்கள் ஆகாய விமானத்திலிருந்து வெடிகுண் டெறிந்தார்கள். சிறு குழந்தைகளும்; இளைஞர்களும், கசையடி அடிக்கப்பட்டார்கள். இந்திய ஸ்திரீகளில் சிலர் இராணுவ வீரர்களால் கற்பழிக்கப்பட்டு பலவிதமாகக் கொடுமைப் படுத்தப்பட்டனர். அமிர்தசரஸிலுள்ள ஒரு தெருவில் ஷெர்வுட் என்ற ஓர் ஆங்கிலமாதை யாரோ அவமதித்து அடித்ததற்காக அந்தத் தெருவழியாகச் செல்லுகின்ற இந்தியர்கள் புழுக்கள்போல் மார்பினால் ஊர்ந்துசெல்ல வேண்டுமென்று கொடுமைப் படுத்தப்பட்டார்கள். பஞ்சாபில் இராணுவச்சட்டம் அமுலிலிருந்த காலத்தில் அங்கு நடைப்பெற்ற கொடுமைகளை யெல்லாம் இங்கு விரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. அதைக் கேட்டதும் காந்தியடிகளுக்கு அரசாங்கத்தினிடத்தி லிருந்த சிறிது பற்றும் அறவே நீங்கி விட்டது. எனவே சத்தியாக்கிரஹ இயக்கத்தை அவர் நிறுத்திவிட்டார். சத்தியாக்கிரஹ இயக்கத்தை அவர் நிறுத்தியதும், ரௌலட் சட்டங்கள் இறந்துபட்டன.

பஞ்சாப் படுகொலையும், கொடுமைகளும் நாட்டிலுள்ள பொது ஜனங்களுக்குள் மனக் கொதிப்பையும் உணர்ச்சியையும் எழுப்பிவிட்டன. அந்த படுகொலையைப்பற்றி விசாரித்து நியாயம் வழங்கவேண்டுமென்று பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்து அரசாங்கத்தினரை வற்புறுத்தினார்கள். அதைப்பற்றி விசா

ரணைசெய்ய அரசாங்கத்தார் ஹண்டர் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை நியமித்தார்கள்: அந்தக் கமிட்டியினால் உண்மையான விஷயங்கள் வெளியாகா தென்று காங்கிரஸ் மகாசபை மகாத்மா காந்தி, ஜனாப் அப்பாஸ் டயாப்ஜி, தேசபந்துதாஸ், ஜயகர் முதலியவர்களடங்கிய சப்கமிட்டி ஒன்றை நியமித்து பஞ்சாப் மாகாண விஷயங்களை விசாரிக்க ஏற்பாடுசெய்தது. பின்னர் இங்கிலாந்தில் பார்லிமெண்ட் சபையார் இந்தியாவில் புதிதாக அமைக்கப்போகும் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த முறையைச் செய்துமுடித்தார்கள். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் 1919-ம் ஆண்டின் மத்தியில் வெளியிடப்பட்டது. அந்த அரசியல் சட்டம் ஏமாற்றத்தையும் அதிருப்தியையுமே உண்டுபண்ணக் கூடியதாக இருக்கின்றதென்ற அபிப்பிராயம் நாட்டுமக்களுக்குள் பரவியது. அமிர்தசரஸில் 1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் மோதிலால் நேருவின் தலைமையின்கீழ் நடைபெற்ற காங்கிரஸில் இந்திய அரசாங்கச் சட்டத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அக்காலத்தில் மகாத்மா காந்தி, மாண்டேகு செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தத்தை ஏற்று அரசாங்கத்தினருடன் ஒத்துழைக்கலாமென்று அந்தக் காங்கிரஸில் வற்புறுத்திப் பேசினார். அவரது அபிப்பிராயத்தை மதிப்பதற்காகவே அந்த அரசியல் முறையை அனுஷ்டித்துப் பார்க்கலாம் என்று ஒரு தீர்மானம் அந்தக் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது.



## ஒத்துழையா இயக்கம்

ஹண்டர் கமிட்டியார் விசாரணை முடிந்தது. ஆனால் பஞ்சாப் படுகொலை விஷயத்தில் யாதொரு நீதியும் வழங்கப்படவில்லை. அவர்களது அறிக்கையில் சில அதிகாரிகளின் நடத்தையைப்பற்றி சாதாரணமாகக் கண்டிக்கப்பட்டிருந்தன. பஞ்சாப் அநீதிகளுக்கு நியாயம் கிடைக்காமல்போகவேகாந்தியடிகளுக்குஇனி இந்திய அரசாங்கத்தாருடன் இந்தியர் ஒத்துழைப்பதே பாபம் என்று தோன்றியது. அதுமாத்திரமல்ல. கிலாபத் அநீதிகளுக்கும் யாதொரு நியாயமும் வழங்கப்படவில்லை. எனவே அவர் பஞ்சாப் கொடுமைகளுக்கு நியாயம் அடைவதற்கும், கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரந்தேடவும் இந்தியாவுக்குச்சுயராஜ்யத்தைபெறவும் ஒத்துழையா இயக்கத்தைத் தவிர வேறு சிறந்த வழியொன்றுமில்லையென்பதை உணர்ந்து தமது கருத்தை வெளியிட்டார். 1920-ம் வருஷம் செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் லாலா லஜபதிராயின் தலைமையின்கீழ் நடைபெற்ற விசேஷகாங்கிரஸில் காந்தியடிகளின் ஒத்துழையாமையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. ஒத்துழையாமைத் திட்டங்களைப்பற்றி ஈண்டுவிரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. அதே வருஷம் டிசம்பர்மாதம் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸில் மீண்டும் ஒத்துழையாமை வற்புறுத்தப்பட்டது. ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு நாட்டிலுள்ளவர்களுக்குள் சுதந்திர உணர்ச்சி பரவி

யது. பொது ஜனங்கள் தங்களது அடிமை வாழ்க்கையை ஒழித்து சுயராஜ்யத்தை அடையவேண்டுமென்று விரும்பினார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் பலர் ஒத்துழையா இயக்கத்தில் சேர்ந்து தீவிரமாகத் தேசத்தொண்டு செய்வதற்கு ஆரம்பித்தார்கள். தியாகத்திலும், சாத்விகமாக எதிர்ப்பதனிலும் தங்களது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளமுடியும் என்பதை நாட்டிலுள்ளவர்கள் தெரிந்து கொண்டார்கள். அந்த இயக்கத்தில் ஈடுபட்டவர்களை காந்தியடிகள் அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டு காரியங்களைச்செய்யும்படி வற்புறுத்திவந்தார். நாட்டிலுள்ள எல்லாவகுப்பினர்களுக்குள்ளும் ஒற்றுமையை வளர்க்கவேண்டுமென்று உபதேசித்தார். தீண்டாமை என்றகொடிய வழக்கத்தை நாட்டவர்கள் அறவே ஒழித்துவிடவேண்டுமென்பதை விளக்கிக்காட்டினார். தேசக்கைத்தொழில்களை அபிவிருத்திசெய்யவேண்டுமென்றும், அவைகளை அபிவிருத்தி செய்வதனால் இந்தியர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளைப்பற்றியும் தெளிவாக நன்கு எடுத்துக்காட்டினார். இவைகளுடன் அரசாங்க சம்பந்தமுள்ள எல்லா இடங்களையும் இந்தியர்கள் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும், அன்னிய ஆடைகளைப் பகிஷ்கரித்து, யாவரும் கதராடைகளையே அணிந்துகொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தினார். முதலில் அரசாங்கத்தார் அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையா இயக்கத்தை அலட்சியமாக நினைத்தனர். ஆனால்



அந்த இயக்கம் சிலமாதங்களுக்குள் இந்தியா முழுவதும் காட்டுத்தீபோல் பரவியது. எனவே அந்த இயக்கத்தை ஒடுக்கவேண்டுமென்று அதிகாரிகள் பலவிதத்திலும் முயன்றுவந்தனர். அதிகாரிகள் அடக்குமுறையைக் கைக்கொண்டு மகாத்மாவின் இயக்கத்திற்கு துணையாக நின்ற தலைவர்களைக் கைதுசெய்து சிறைக்கனுப்பிவந்தனர். அந்தக்காலத்தில் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சிமுறையை பலப்படுத்துவதற்காக இந்தியாவுக்கு விஜயம்செய்யும் வேல்ஸ் இளவரசைப் பகிஷ்கரிக்கும்படி காந்தியடிகள் பொதுஜனங்களைக் வேண்டிக்கொண்டார். பம்பாயில் வேல்ஸ் இளவரசர் வந்திறங்கியதும் இந்தியா முழுவதும் காந்தியடிகளின் வேண்டுகோளுக்கிணங்கி எல்லா நகரங்களிலும் கடைகள் எல்லாம் மூடப்பட்டு வேலைநிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது. பம்பாயில் மாத்திரம் வேலைநிறுத்தத்தில் கொஞ்சம் கலவரம் ஏற்பட்டது. அந்தக்கலவரம் நிற்கும் வரையில் அதற்குப் பிராயச்சித்தமாக காந்தியடிகள் உண்ணா விரதத்தை அனுஷ்டித்தார். நாடெங்கும் நடைபெற்றவேலை நிறுத்தம் அதிகாரவர்க்கத்தினரின் மனதைக்கலங்கும்படி செய்துவிட்டது. பின்பு அதிகாரிகள் காங்கிரஸ் தொண்டர்படை, கிலாபத் தொண்டர்படை முதலியவைகளில் தொண்டர்களாகச்சேர்வது குற்றமென்று சட்டப்படி பஞ்சாப், ஐக்கிய மாகாணம், வங்காளம், சென்னை முதலிய மாகாணங்களில் அறிக்கை பிறப்பித்தனர். அரசாங்கத்தார் இம்

மாதிரி அறிக்கையை வெளியிட்டதும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொண்டர் படையில்சேர்த்துக் கொண்டார்கள். அத்தொண்டர்களில் பலரைக் கைது செய்து அதிகாரிகள் பலவிதமாகத் தண்டித்தனர். இதற்குப் பிறகு வேல்ஸ் இளவரசர் லக்ஷ்மணபுரி, அலகாபாத், காசி, பாட்னா முதலிய நகரங்களுக்கு விஜயம்செய்தார். அவரது வரவை பகிஷ்கரிப்பதற்கறிகுறியாக அந்த இடங்களிலுள்ளவர்கள் அமைதியுடன் வேலை நிறுத்தத்தை அனுஷ்டித்தார்கள். அமைதியாகக் கிளர்ச்சிசெய்கின்றவர்களை அதிகாரிகள் கைது செய்து கூட்டங் கூட்டமாகத் தண்டித்து சிறைக்கனுப்பினார்கள். இதை ஒத்துழையாமைக்கு விரோதமாக இருந்த மிதவாதிகளுங்கூடக் கண்டித்தார்களென்றால் அந்த அடக்கு முறையின் தாண்டவத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? பின்பு காந்தியடிகள் பர்தோலியில் சட்டசாத்விக மறுப்பை ஆரம்பிக்கப் போவதாக வெளியிட்டார். இடையில் 1921-ம் வருஷம் ஆமதாபாத் நகரில் ஹக்கீம் அஜ்மல் கானின் தலைமையின் கீழ்க்கூடிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்டது. இவ்வித நிலைமையில், பண்டிட் மதன் மோகன் மாளவியா காந்தியடிகளுக்கும், இராஜப்பிரதிநிதிக்கும் ஒருராஜி செய்ய பகீரதப்பிரயத்தினஞ்செய்தார். அவருடைய முயற்சியினால் 1922-ம் ஆண்டின் துவக்கத்தில் பம்பாயில் சர்வகட்சித் தலைவர்களின் மகாநாடு ஒன்று



நடைபெற்றது. மகாநாட்டின் யோசனைப்படி நடக்கக் காந்தியடிகள் ஒப்புக்கொண்டார். ஆனால் இராஜப்பிரதிநிதி மகாநாட்டின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். பின்பு பர்தோலியில் சட்ட சாத்விக மறுப்பை ஆரம்பிக்கப் போவதாக காந்தியடிகள் முடிவான அறிக்கையொன்றை வெளியிட்டார். இடையில் 1922-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ந் தேதியன்று கோரக்புரி ஜில்லாவிலுள்ள சௌரி சௌரா என்ற இடத்தில் பொதுஜனங்களுக்கும் போலீசார்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. பொதுஜனங்கள் போலீஸ்டேஷனை இடித்துக்கொளுத்தியது மன்றி போலீசார்களில் சிலரை அடித்துக்கொன்று விட்டனர். அந்தச் சம்பவத்தில் 27 பேர்கள் இறந்துபோயினர். இதைக்கேட்டதும் காந்தியடிகளின்மனம் பதறித் துக்கத்தில் ஆழ்ந்தது. அதற்குப் பிராயச்சித்தமாக அடிகள் ஐந்து நாள் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தார். ஜனங்கள் அஹிம்ஸாதர்மத்தின் உண்மைகளை நன்கு அறிந்துகொள்ள வில்லையென்று தீர்மானித்துத் தாம் பர்டோலியில் ஆரம்பித்து நடத்துவதற்கு இருந்த சாத்விக எதிர்ப்புப்போரை நிறுத்திவிட்டார். பின்பு பர்தோலியில் காங்கிரஸ் வேலைக் கமிட்டியின் கூட்டம் ஒன்றைக் கூட்டி இனி காங்கிரஸ் மகாசபையும், நாட்டவர்களும் நிர்மாண வேலைகளைச்செய்வதிலேயே தங்களது கவனம் முழுவதையும் செலுத்த வேண்டுமென்று ஒருதீர்மானத்தை நிறைவேற்றினர்.

பின்பு அந்தத் தீர்மானம் டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினால் உறுதிசெய்யப்பட்டது. சாத்விக எதிர்ப்புப்போரை காந்தியடிகள் நிறுத்திய பிறகும் அதிகாரிகள் அடக்கு முறையை நிறுத்தவில்லை. நாட்டில் பலதேசத்தொண்டர்கள் அடக்கு முறைச் சட்டங்களின்படி கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டனர். 1922-ம் வருஷம் மார்ச்சு மாதம் 10-ந் தேதியன்று அதிகாரவர்க்கத்தினர் உலகம் போற்றும் உத்தமரான காந்தியடிகளையும் இராஜத்துரோகக் குற்றஞ்சாட்டிக் கைதுசெய்தனர். தாம் சிறைக்குச் செல்லுவதற்கு முன்பு காந்தியடிகள் நாட்டவர்க்கு இராட்டினத்தில் நூல் நூற்பதையும், கதர் அணிவதையும் வற்புறுத்திவிட்டுச்சென்றார். அதேமாதம் 18-ந் தேதியன்று செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது. மகாத்மா தாம் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டு, தற்கால ஆட்சி முறையிலுள்ள கேடுகளையும் அதை இந்தியர்கள் நீக்க முயற்சி செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி வாக்கு மூலம் கொடுத்தார். நீதிபதி காந்தியடிகளை மிகவும் புகழ்ந்து அவருக்குச்சட்டப்படி ஆறு வருடவெறுங்காவல் தண்டனைவிதித்தார். பின்பு அவரை எர்வாடா சிறைக்குக்கொண்டு போனார்கள்.

எர்வாட சிறையில் காந்தியடிகள் இராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டும், புஸ்தகங்களைப் படித்துக்கொண்டும் காலங்கழித்துவந்தார். பின்பு காங்கிரஸில் இரு பிரிவு ஏற்பட்டது. ஒருசாரார் சட்டசபைப் பிரவேசத்தைக் கண்டித்து ஒத்துழையாமையையே நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினர். மற்றொரு சாரார் சட்ட சபைகளுக்குச் சென்று அங்கு இரட்டையாட்சியை ஒழிக்கவேண்டுமென்றனர். 1922-ம் ஆண்டில் கயையில் தேசபந்து தாஸரின் தலைமையின் கீழ் நடைபெற்ற காங்கிரஸில் இருகட்சியினரும் தனித்தனியாகப் பிரிந்தனர். காங்கிரஸ் ஒத்துழையாமையை வற்புறுத்திச் சட்டசபைப் பகிஷ்காரத்தை ஆதரித்தது. பின்பு சில தலைவர்களின் பெருமுயற்சியால் இரு கட்சியினர்களுக்கும் ஒருவித ராஜி ஏற்பட்டு 1923-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் டில்லிமாநகரில் நடந்த விசேஷ காங்கிரஸில் சட்ட சபைப் பிரவேசத்தை அனுமதித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த ஆண்டின் இறுதியில் காக்கிநாடாவில் நடைபெற்ற காங்கிரஸில் அதே தீர்மானம் மீண்டும் வற்புறுத்தப்பட்டது.



1924-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் எர்வாடா சிறையிலிருந்த காந்தியடிகளுக்கு குடல் அனுபந்த நோய் கண்டது. சிறந்த வைத்திய நிபுணர்களால் அவருக்குச் சத்திர சிகிச்சைசெய்யப்பட்டது. அச்சமாசாரத்தைக்கேட்டு இந்தியதேசம் முழுவதும் துக்கசாகரத்தில் ஆழ்ந்தது. பின்பு ஆண்டவன் அருளால் அவர் நோய் நீங்கப்பெற்று குணமடைந்தார். இதற்குள் அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்துவிட

வேண்டுமென்று பொது ஜனங்கள் நாட்டில் எங்கும் தீவிரமாகக் கிளர்ச்சிசெய்து வந்தனர். இந்தியா சட்டசபையிலும் அவரை விடுதலைசெய்துவிட வேண்டுமென்று தீர்மான அறிக்கைகள் அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் கண்டுபயந்து அரசாங்கத்தார் 1924-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 7-ந் தேதி யன்று காந்தி மகாத்மாவை சிறையிலிருந்து விடுதலை செய்துவிட்டனர். பின்பு அவர் தேகஆரோக்கியத்தைக்கருதி கொஞ்சகாலம் பம்பாய்க்கருகிலுள்ள ஜூஹூ என்னும் கடற்கரைப் பட்டினத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டார். பின்பு அவர் நாட்டின் நிலைமை யுணர்ந்து கதரைப்பற்றியும்,ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும்வற்புறுத்தினர். கோகத்திலும், டில்லியிலும் ஏற்பட்டஹிந்துமுஸ்லீம் சச்சரவைக்கண்டு வருந்தி 21 நாள் உண்ணுவிரதமிருந்தார். பின்பு சுயராஜ்ஜியக் கட்சியைச்சேர்ந்த பலர் கல்கத்தாவில் கைதுசெய்யப்பட்டனர். காந்தியடிகள் உடனே கல்கத்தாசென்று சுயராஜ்யக் கட்சியாருடன் ஒருராஜி செய்துகொண்டு மீண்டும் காங்கிரசில் ஒற்றுமையை ஏற்படுத்தப் பெரிதும் முயன்றார். 1924-ம் வருஷம் பெல்காம் நகரில் நடைபெற்ற காங்கிரஸில் காந்தியடிகள் தலைமை வகித்து நடவடிக்கைகளை நடத்திவைத்தார். காங்கிரஸ் மகாசபையும் அவரது யோசனையை ஏற்றுக் கதர் அணிவதையும் நூல் நூற்பதையும் வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றியது. பின்பு அவர் கதர்,ஹிந்து



முஸ்லீம் ஒற்றுமை,தீண்டாமையை ஒழித்தல்முதலிய விஷயங்களில் ஈடுபட்டு உழைத்துவந்தார். 1925-ம் ஆண்டில் ஸ்ரீமதி சரோஜனிதேவியின் தலைமையின் கீழ் கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸுக்கு அவர் விஜயம்செய் திருந்தார். பின்பு தேகசௌக்கியத்தைக் கருதி அவர் சென்ற ஒரு வருஷகாலமாக அரசியல் வேலைகளைச் செய்யாமல் விலகி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த காலத்திலும் அவர் நாட்டின் முன்னேற்ற விஷயமான பல காரியங்களைச் செய்துவந்தார். இவ்வாண்டு அஸ்ஸாமிலகூடும் காங்கிரஸுக்குப் பிறகு அவர் முன்போல் தீவிரமாக தேசவேலையில் ஈடுபட்டு உழைப்பார்.எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் தேகபலத்தையும் அளித்துக் காப்பாருக. மகாத்மாகாந்தி வாழ்க. வந்தேமாதரம்.

# ஒரு நியாயாதிபதியின் கடன்.

“தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்.” —

ஒருவன், தன் கண்ணாரக்கண்ட உண்மையை, பயத்தாலோ, கோழைத்தனத்தாலோ, மறைத்துப் பொய் கூறுவானுனல், அச்செய்கையே அவன் மனத்திலிருந்து அவனை அமைதியற்றவனுக்கிவிடும். அவன் கூறிய பொய், அவன் நெஞ்சத்தை யுறுத்தி,

நீராத்துயரத்திலும், கவலையிலும், கலகத்திலும் ஆழ்த்திவிடும். இதன் பயனாக அவன் நல்வழியிலும் திரும்பிவிடுவான்.

லண்டன் மாநகரம் என்பது இங்கிலாந்தின் முக்கிய பட்டணம். அந்நகரத்தில்தான் நமது ஐந்தாம் ஜியார்ஜ் சக்ரவர்த்தியார் வசிக்கின்றார். சுமார் மூந்நூறு வருடங்களுக்கு முன்பு, அப்பட்டணத்திலிருந்த 'வெஸ்ட் மின்ஸ்டர்' என்னும் பாடசாலையில், இரண்டு சிறுவர் படித்துக்கொண்டிருந்தனர். ஒருவன் பெயர் நிகோலஸ்; மற்றவன் பெயர் வேக்.

நிகோலஸ் அதைரியமும், கோழைத்தனமும் மிக்கவன்; கெட்ட சோம்பேறி; பெரும் பொய்யன்; செய்த குற்றத்தை மறைத்துப் பொய்கூறிச் சாதிப்பவன். வேக் என்பவனோ தைரியஸ்தன்; தனக்குத் தண்டனை கிடைப்பதாயிருப்பினும் பொய் கூறாதவன்; தீயவழியைத் தவிர்த்தவன்; நல்வழியிலேயே செல்பவன்; நியாயத்தைக் கடைப்பிடித்தொழுகுபவன், அச்சிறுவயதிலேயே அவன் பரோபகார சிந்தையுடையவனாயிருந்தான். இவ்விருவரும் எதிர்மாறான குணங்களைக் கொண்டிருந்தனராயினும், இணைபிரியாச் சிநேகிதர்களாயிருந்தார்கள்.

ஒருநாள் பாடசாலையிலுள்ள மாணவர்களெல்லோரும் பெஞ்சியின் மேல் அமர்ந்திருந்தனர். நாற்காலியில் உட்கார்ந்திருந்த உபாத்தியாயர் ஏதோ வேலையாக வெளியே சென்றார். உடனே பையன்கள்



எல்லோரும் சேஷ்டைக்கு ஆரம்பித்தனர். சிலர் ஓடினார்; சிலர் குதித்தனர்; சிலர் தொப்பிகளை எறிந்து விளையாடினர்.

அவர்கள் இருந்தகூடம் ஒரு அணிப்படுதாவினால் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நிகோலஸ் குதித்துச் சென்று அப்படுதாவை மூட்டினான். அது மிக்க பழைமையான துணியாதலால் நெடுகக் கிழிந்துவிட்டது.

அதைக்கண்டதும் பயத்தால் முகம் வெளுக்க, உடல் நடுங்க நின்றுவிட்டான். மூர்க்கமும் கோபமும் மிகுந்த உபாத்தியாயர் தன்னைப்பலியிடுவாரோ என்று கலங்கினான். மற்றைய மாணவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு அதை மறைக்கும் வழியைத் தேடிக்கொண்டிருந்தனர். பின்பு ஒருவாறு அதைமறைத்து, மௌனமாகத் தத்தம் இடத்திற்போய் உட்கார்ந்துவிட்டனர்.

ஒன்றுமில்லாமல் அன்று பையன்கள் எல்லோரும் மூச்சு விடாமல், சத்தமின்றி உட்கார்ந்திருந்தனர். அதைக்கண்ட உபாத்தியாயர் மனத்தில் சந்தேகங்கொண்டு, அக்கூடத்தைச் சுற்றிச்சுற்றி நோக்கினார். படுதாவின் கிழிசல் கண்ணுக்குத் தென்பட்டதும், அதைச் சமீபித்து நன்றாய்ப் பரிசோதித்தார்.

"இந்தக் குறும்பைச் செய்தவன் யார்? உடனே எழுந்து நில்" என்று அப்படுதாவைச் சுட்டிக் காட்டிக்

கொண்டே, வகுப்பைப்பார்த்துக் கேட்டார். ஒருவனாவது அசையவில்லை, எல்லோரின் இருதயமும் படபடவென்று பயத்தால் அடித்துக்கொண்டிருந்தது. ஒருவரும் பேசத் துணியவில்லை. ஆதலால், ஆசிரியர் ஒவ்வொருவனையும் கேட்கத் தொடங்கினார்.

ஒவ்வொருவனும், அந்த ஆபத்தான சமயத்தில் கற்பிக்கக் கூடிய பொய்யினால் தப்பினர். நிகோலஸ் பதில் கூறும் முறைவந்தது. அவன் பேசவாயெடுத்தான். நாத்தடுமாறியது. நிஜத்தைக் கூறலாமாவென்று நினைத்தான். அவனுக்கு தைரியம் போதவில்லை; "ஐயா! நான்செய்யவில்லை, எனக்கு தெரியாது" என்று ஈனசுரத்துடன் கூறி, குறுகிய அங்கம் பீதியால் நடுங்க அவரையே உற்றுப்பார்த்தான். "சரி" என்று உபாத்தியாயர் அவனைக்கடந்து அப்புறம் நடந்தார். அவன்கூறிய பொய், அவனது நெஞ்சத்தைக்கூர் வேல்போல் தைத்துப் புண்படுத்தியது. எல்லாப்பையன்களும் தன்னைப் பெரும் பொய்யன் என்று பட்டப்பெயரிட்டு அழைப்பார்களே என்று வெட்கங்கொண்டு, தலை குனிந்து உட்கார்ந்திருந்தான்.

வேக், நிகோலஸிற்கு மூன்றாவது பையன். நிகோலஸ் என்பவனின் உயிர்த்தோழன். அவனே தைரியக் குறைவினால் பேராபத்தில் சிக்கியிருக்கின்றான். அவனைக்காப்பது தன்னுடைய கடமையென்பதை அவன் உணர்ந்தான்.



"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு"

என்னும் பெருந்தன்மையான எண்ணமே நிகோலஸை எவ்விதத்திலும் தப்புவிக்கும்படி அவனைத் தூண்டியது. அவன்செய்த குற்றத்தையும், அதைமறைக்கக் கூறிய பொய்யையும் ஆசிரியர் அறிந்தால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனை மிகவும் குரூரமாக இருக்கும் என்று யோசித்தான். அவர் அவனைப் பள்ளிக்கூடத்தினின்று தூரத்திலும் துரத்திவிடுவார். பின்பு அவனது வாழ்நாட்களை பயனற்றதாய்விடும் என்று தீர யோசித்து ஒருமுடிவுக்கு வந்தான்.

வேக் மெதுவாக எழுந்து நின்றான். உபாத்தியாயர் அவனைக்குறிப்பாக விறைத்துப்பார்த்தார். அவன் பதிலொன்றும் பேசாமல் தலைகுனிந்தான். கண்களிலிருந்து கண்ணீர் பொட்டுப் பொட்டாக இறங்கியது. அவன் சாதித்த மௌனமே அவனைக் குற்றவாளியென்று தெரிவித்தது. உடனே உபாத்தியாயர் அவனை நடுக்கூடத்திற்கு அழைத்துச்சென்றார். எல்லாப் பையன்களுக்கும் எதிரில் அவனுக்கு இருபத்து நான்கடிகளைக் கொடுத்தார்.

வேக், தண்டனைபெற்றதும், தன் இடத்திலே போயமர்ந்தான்; தன்கடமையை நிறைவேற்றி விட்டதால் ஒருவிதமான திருப்தியும், சந்தோஷமும் கொண்டான். அவன்கொண்ட உதாரகுணம் அவனுடைய அதைரியனண்பனைக் காப்பாற்றியது. அவன்பட்ட

பிரம்படி சில நாட்களில் ஆறிப்போகும்; ஆனால், அவன் செய்கை மறக்கவும் படுமோ?

நிகோலஸ் நிலைமை பின்னும் பரிதாபகரமாய் விட்டது. அவன்தான் ஒரு பயங்கொள்ளி என்பதை யறிவான். எல்லோரும் தன் நிர்குணத்தையறிவர் என்பதும் அவனுக்குத்தெரியும். பள்ளிக்கூடம் விட்டதும் தோட்டத்திற்குச்சென்றான். அங்கு எல்லோரும் தன்னைச் சுட்டி, அவதூறாகப் பேசுவதைக்கேட்டான்.

வேக் தன்னுடைய அறையில் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தான். நிகோலஸ் அவன் கோலத்தைக் கண்டதும், "ஓ! வேக்" என்று மேலும் பேசவாயெழாமல், அவன் கையைப்பிடித்துக்கொண்டு, தேம்பித் தேம்பி யழவாரம்பித்தான். "நான் ஒருகாலும், என் உயிர் போனபின்னும், உன் எதிர்பாராத உதவியை மறக்கமாட்டேன். பள்ளியினின்றும் நான் துரத்தப்பட்டால் என்பிதா என்னைத்தம் வீட்டில் சேர்த்துக் கொள்ளமாட்டார். நான்மாத்திரம் பிழைத்திருந்தால் உனக்குப் பிரதி செய்யாமலிரேன்." என்று இறைஞ்சிக் கூறியகன்றான்.

T. S. Narayana Row.
MADRAS.

# பேணுதல்

சிறுவர் சிறுமிகளே!

நீங்கள் 3-ம் வகுப்புப் பாட புத்தகத்திலுள்ள ஆத்திசூடி என்ற பகுதியில் "தந்தை தாய்ப் பேண்" என்ற அரிய நீதிவாக்கியத்தைப் படித்திருக்கிறீர்கள். அச்சிறந்த வாக்கியம் தன்னைப் பெற்று வளர்த்து, பாலூட்டி, சீராட்டி, ஈ எறும்பு அணுகாது, உங்களுக்கு நோய் வந்தபோது தாங்களும் பத்தியமாக இருந்து கஷ்டப்பட்டு, உங்களுக்கு வேண்டிய உணவு உடை ஆகிய யாவும் அளித்து,

> தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"

என்று நம் ஔவைப்பிராட்டியாரின் சகோதரராகிய திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்து அருளியிருக்கிறபடி நீங்கள் நல்ல கல்வி கேள்விகளிற் சிறந்து ஒரு சபையில் முதன்மைபெற்றுக் கீர்த்தி வாய்ந்தவர்களாக விளங்கப் படிக்கவைத்த பெருபகாரத்திற்காக நீங்கள்,

> "நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
> தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தருத லால்."

என்றபடி, உங்கள் பெற்றோர் உங்களை வாய்திறந்து உதவி செய்யுங்கள் என்று கேட்காததற்கு முன்னே

மேயே, தென்னைமரத்தின் கன்றினைப்போல் நீங்கள் அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றும், திருவாய் மலர்ந்த திருவள்ளுவ நாயனாரின் திருவாக்கின்படி, இவனுடைய தந்தை இவனை என்ன தவஞ்செய்து பெற்றானோ, இப்பேர்ப்பட்ட நற்குண நற்செய்கையுடைய பிள்ளை இவருக்குக் கிடைத்தது அரிது அரிது. இவன் தந்தைபெற்ற பேறே பேறு. செய்த புண்ணியமே புண்ணியம். தவமே தவம்" என்று உங்களுடைய பெற்றோர்க்கு நல்ல புகழும் கீர்த்தியும் பெருமையும் கிடைக்கும்படியாக நீங்கள் நடந்து,

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்"
"தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை"
"தந்தைசொல்மிக்க மந்திரம் இல்லை"
"தந்தைசொல் மீறினோன் அந்தரமாவான்"
"தாய்சொல் தட்டினால் பேயாய் அலைவான்"

என்னும் நீதிகளையுணர்ந்து,

"அறிவோர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்"

என்று வெற்றிவேற்கையில் நீங்கள் படித்தமாதிரி நடந்து நல்லவர்கள் என்று எவரும் புகழப் பெற்றோர்களை அந்திய காலத்தில், முற்காலத்தில் இருந்த உத்தமன் தருமவியாதனைப்போல் தாய் தந்தையரை உபசரித்துக் காப்பாற்ற வேண்டியது அவர்கள் உங்களைப் பெற்று வளர்த்து வாலிபமாக்கிவிட்ட பெருங்கடனுக்குச் செய்யும் சிறிய கடன்தான் ஆகும். பட்டினத்து



அடிகள் தம் ஆஸ்தி பாஸ்திகளையெல்லாம் வெறுத்து அவைகளைத் தானதருமம் செய்துவிட்டுத் தாம் சந்நியாசியானபோதுங்கூடத் தமது தாயை மறந்தாரோ? தாய் இறக்கும்வரையில் உடன் இருந்து உபசரித்து, இறந்தபின் தாய்க்குச் செய்யவேண்டிய கடன்களையெல்லாம் செய்துவிட்டல்லவா அவர் வெளிப் புறப்பட்டார்? அவரது பிதிர் பக்தியை என்னென்று இயம்புவது? அம்மம்ம! அதைச் சொன்னால் இன்றைக்கும் முடியாது, நாளைக்கும் முடியாது, என்றைக்கும் முடியாது. அது அவ்வளவு பெருமைவாய்ந்தது.

நீங்கள் உங்களது பாடசாலைப் புத்தகத்தில் "குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்" என்ற நீதி வாக்கியத்தையும் படித்திருப்பீர்களென்று எண்ணுகின்றேன். ஒருகால், அறிந்திராவிட்டாலும் இனிமேல் அறியவுங்கூடும். இங்கு நான் இயம்புவதிலிருந்து அறிந்தும் கொள்ளலாம். இந்த வாக்கியத்திலும் தந்தை தாய்ப்பேண் என்ற வாக்கியத்திலும் பேண் என்ற வார்த்தையே உபயோகிக்கப்பட்டிருப்பதால், குலமகளுக்கு அழகு கொழுநனைக் காப்பாற்றுவது என்று அர்த்தங் கொள்ளுதல் கூடாது.

பேண், பேணுதல், என்பது ஒரே வார்த்தையாய் நமக்குத் தோன்றினும் அவை பொதுவாக ஆசைப் பெருக்கம், கருத்து, காத்தல், குறித்தல், விரும்பல் எனப் பல அர்த்தம் கொடுக்கும். ஆதலால் அந்தந்த வாக்கியங்களின் தன்மைக்கும் சந்தர்ப்பத்துக்கும்

தக்கபடி நாம் அதை அர்த்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

ஆகலால், நல்ல குலமகளாகிய கற்புடைய பெண்மணிகள், தம் கொழுநராகிய கணவர்கள் ஆயிரம் அமாவாசைபோல் நிறத்தில் கறுப்பாயிருந்தாலும், கூன், குருடு, செவிடு, ஊமை, பிணி முதலியவைகளால் அங்கீனராய் அசௌகரியம் உள்ளவராக ஆகிவிட்டாலும், புல் ஆனாலும் புருஷன், மாமானாலும் மணவாளன், கல் ஆனாலும் கணவன் என்று முற்காலத்தில் முனிவரும் தேவரும்யாவரும் புகழ் விளங்கிய உத்தமி நளாயினியைப்போல், அந்நிய ஆடவரை ஆலகால விஷம்போல் எண்ணித் தன் வாழ்வு நீடிக்கும்படி மணந்த கணவனையே ஆயிரம் மன்மதனுக்குச் சமானமாய்க் கடவுள் என்று எண்ணி அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து பெருமையாய் வாழவேண்டும் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.

தனது தந்தை தாயைப் பேணிய தருமவியாதன், தனது கணவனைப் பேணிய நளாயினி என்று மேலே குறிப்பிட்ட நல்லோர்களின் கதைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள், அறிந்திருந்தால் ஞாபகம் உண்டாகும்படியும், அறியாதிருந்தால் அறிந்துகொள்ளும்படியும் உங்கள் அன்பனாகிய இந்த 'பாலவிநோதினி' யின் அடுத்த பத்திரிகையில் எழுதலாம் என்று இருக்கிறேன். கடவுள் கருணை புரிவாராக.

பி. புரிமணப் பல்லவராயர்.

---



# ஆன்றோர் வீரமொழிகள்.

(ஸ்ரீமான். கே. எஸ். மணியன் மொழிபெயர்ப்பு.)

இப்பொழுது இந்தியாவில் நடைபெறும் அரசியல்முறையைவிட, இந்தியர்களையே அவர்களது நாட்டையாளும்படி விட்டுவிடுவது சிறந்ததாகும். இந்தியாவில் சில சிறு தொல்லைகள் இருந்தபோதிலும் அவை பொருட்படுத்தக் கூடியவையல்ல.

"டாக்டர். ரூதர் போர்டு"

அன்னியரால் அடக்கியாளப்பட்ட ஜாதியினராகிய நாம் நமது உயிருக்குயிரான பிரஜா உரிமையை அடையும்பொருட்டுப் போராடி வருகின்றோம். நமது சுதந்திரத்தைப் பறிமுதல்செய்த அயல் நாட்டவரை நாம் இப்பொழுது எதிர்க்கும் நிலைமையிலேயே இருந்து வருகின்றோம். மிகுந்த வன்மைபெற்ற அதிகாரவர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் எக்காலத்திலும் போர்வீரர்களைப்போல் தயாராக இருக்கவேண்டும்.

"மோதிலால்நேரு"

இதுவரையில் எந்த ஜன சமூகமும் கஷ்டங்களை அனுபவியாமல் சுதந்திரத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை.

"மகாத்மாகாந்தி"

படித்தவர் என்பவர் யார்? தாம் கற்றவழியில் நிற்பவரே.

"முகம்மது நபி"

நாம் தன்நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்கள் நம்மைநம்பும்படி நாம் நடந்துகொள்

ளவேண்டும். மற்றவர்கள் நமது சிறந்த நடத்தையைப் பார்த்து அதைக் கைக்கொள்ளும்படி நாம் அவர்களுக்குச் சிறந்த உதாரணமாக விளங்கவேண்டும்.

"ஆசிரியர். பி. ஸி. ராய்"

நாம் நமது சொந்த வீட்டில் யஜமானர்களாகவே இருக்க விரும்புகின்றோம். நாம் அதிகாரவர்க்கத்தினரை இணங்கும்படி செய்தாலன்றி அவர்கள் ஒரு அங்குலங்கூட விட்டுக்கொடுக்க விரும்புகின்றார்களில்லை. எனவே நாம் நமது சுதந்திரத்தை அடையும் விஷயத்தில் ஒற்றுமையுடன் கட்டுப்பாடாக உழைத்தல் வேண்டும். "லாலா லஜபதிராய்"

குடியின்பயனாகப் பல இன்னல்கள் விளைந்து போதிலும் அது ஆங்கில சமூகத்தில் ஒரு நாகரிகமான வஸ்துவாகக் கருதப்படுகின்றது. இல்லாவிடில் அந்தக் குடிக்கும் வழக்கம் இந்த எளிய தேசத்தில் பரவியிருக்கவே முடியாது. "மகாத்மா காந்தி"

பதினாயிரம் ஆண்டுகள் இந்த உலகில் ஜீவித்திருக்கப் போவதாக நினைத்து நீ நடக்காதே. மரணமானது உனக்காக எப்பொழுதும் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றது. உனது உடலில் உயிருள்ளபொழுதே நீ நல்லகாரியங்களைச் செய். உயிர் நீங்கியபிறகு உன்னால் ஒன்றும் செய்யமுடியாது.

"மார்க்க ஔரேலியன்"